ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்
01.02.2012 - மலர் 08, இதழ் 48



## அகிலத்திற்கோர் அருட்கொடை

## முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்



## காற்று தரும் குடிநீர்



## சுதந்திரப் போராட்டத்தில் தோள்கொடுத்த வீரர்கள்

சுதந்திர வீரர்களை ஒன்றாக வரைந்த ஓவியம் உள்ளே...

## வாசகர் முகம்



விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரித்தானிய வருமான அதிகாரி

இலங்கையின் யுத்த சட்டத்தின்படி, நிர்வாகங்களை மேற்கொள்ள ஆள்பதி ஒருவர் நியமிக்கப்பட்டார். இந்த நிர்வாகம் புதிய அரசியலமைப்பு முறை ஒன்றை நடத்திச் செல்ல வேண்டி இருந்ததால் நீதி நியாயங்களையும் உண்மைகளையும் நிலைநாட்ட நீதிமன்ற நடைமுறையை அமுல்படுத்தியது. அத்துடன், ஸ்டுவர்ட் ஆள்பதி அவர்களால் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு மற்றும் காலி ஆகிய கோட்டைகளுக்கு யுத்தத் தளபதிகள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் சிதைவடைந்திருந்த கொழும்புக் கோட்டையின் பாதுகாப்பை மீளக் கட்டி எழுப்பினர். ஒல்லாந்தரின் பல்வேறு இடையூறுகள், அடக்குமுறைகளுக்கு மத்தியில் இந்நாட்டில் வாழ்ந்த கத்தோலிக்கர்கள் தமது மதக்கடமைகளை மிகுந்த சிரமத்துடன் அனுஷ்டித்து வந்தனர். அவர்கள் எவ்வித தொல்லைகளும் இடையூறுகளும் இல்லாமல் தமது சமய நடவடிக்கைகளில் ஈடுபடும் வகையில் சுதந்திரத்தை வழங்கினர். உதவி உபகாரங்களும் வழங்கப்பட்டன.

ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் இலங்கையில் சேவை ஆற்றும் எந்தவொரு அதிகாரிக்கோ அல்லது, உத்தியோகத்தருக்கோ அவரவரது சமய நடவடிக்கைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவகையில் சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

இத்தகைய சட்டதிட்டங்களை நிறைவேற்றிய இந்த யுத்த ஆள்பதி திடீரென மரணமடைந்தார். அவர் பதவியேற்று ஒரு வருட காலத்திலேயே. அதாவது 1796 இல் இது நிகழ்ந்தது. அதன்பின், பிரிகேடியர் ஜெனரல் பியர் பெட்ரிக் டி மியூரன் என்பவர் யுத்த ஆள்பதியாக நியமிக்கப்பட்டார். கி.பி.1797 முதல் கி.பி. 1798 வரை அவர் பதவி வகித்தார். இதற்கிடையில் சென்னையில் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட ரொபர்ட் அன்ட்ரூஸ் அவர்கள் இலங்கையில் வருமான அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் கண்டி மன்னனோடு முக்கிய ஒப்பந்தம் சம்பந்தமான பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை வேன்கள் குறித்து கடுமையான கண்காணிப்பு

## புதிய வேலைத்திட்டங்களும் அறிமுகம்



நாட்டிலுள்ள சகல பாடசாலை வேன்களையும் பொலிஸ் நிலையங்களில் மீண்டும் பதிவு செய்யுமாறும் அவ்வாகனங்களின் தரம், ஓட்டுநர்களின் தகைமை மற்றும் அனுபவம் ஆகியன தொடர்பான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் கொழும்பு போக்குவரத்து பொலிஸ் தலைமையகம் நாட்டிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது. பொலிஸ் மா அதிபரின் உத்தரவிற்கமையவே, இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், போக்குவரத்தில் ஈடுபடுகின்ற சகல பாடசாலை வேன்களையும் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்துமாறு போக்குவரத்து பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாக கொழும்பு பொலிஸ் தலைமையக போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கே. அரசரத்தினம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொலிஸ் நிலையங்களில் ப்திவு செய்யப்படாமல் சேவையில் ஈடுபடுகின்ற பாடசாலை வேன்கள் குறித்து கடுமையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் உரிய பாதுகாப்பு வசதிகளை இந்த வேன்கள் கொண்டிருக்கின்றனவா? என்பதையும் அவற்றின் வாகன உதிரிப்பாகங்கள் சீராக இயங்குகின்றனவா? என்பது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 18 ஆம் திகதியன்று கல்கிசையில் இடம்பெற்ற பாடசாலை வேன் விபத்தின் காரணமாக, மாணவர்கள் பலர் காயங்களுக்கு உள்ளாகிய சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி அவர்கள் கவனம் செலுத்தியதை அடுத்தே, குறித்த புதிய வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## நீரிலும் நிலத்திலும் பயணிக்கும் கார்



மோட்டார் கார்கள் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து மக்களின் தேவைகளுக்கேற்பவும் வர்த்தக சந்தையில் நிலவும் போட்டித் தன்மையை ஈடுசெய்யவும் விதவிதமான கார்கள் அடுத்தடுத்து உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், அண்மையில் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள கார் ரகம்தான் 'வொக்ஸ்வேகன் அகுவா' (Volkswagen aqua). ஐதரசன் எரிபொருளில் இயங்கக்கூடியதாகவும் நீரிலும் நிலத்திலும் பயணிக்கக்கூடிய வகையிலும் இந்தக் கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், பயணிக்கும்போது காபன் மாசுக்கள் எதுவும் வெளியிடாமல் இருப்பது முக்கிய விடயமாகும்.

இந்த அதி நவீன காரை 'யுஹான் ஸேங்' என்ற 21 வயது நிரம்பிய இளம் யுவதியே வடிவமைத்துள்ளார். சீனாவின் சிஹுவா பல்கலைக்கழகத்தில் கைத்தொழில் நிர்மாணத்துறையில் பட்டம் பெற்றவரான இவர், தற்போது தனது மேற்படிப்புக்காக போக்குவரத்துத் துறைசார் வடிவமைப்பு கற்கைநெறியொன்றை தொடரவுள்ளார்.

இந்தக் கார் வீதிகள், ஏரிகள், ஆறுகள் உட்பட, கரையோர நீர்ப்பரப்பிலும் பனிக்கட்டி மற்றும் மணல் மேற்பரப்புகளிலும் மிக வேகமாகப் பயணிக்கக்கூடிய வகையில் அதி நவீன தொழில்நுட்பங்களைக்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நவீன ரக காரானது, சீனாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த CDN Car Design





Award எனும் போட்டியில் பங்கேற்பதற்காக வடிவமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(-அ)

### உ/தரப் பரீட்சை:

## விடைத்தாள் மீள்திருத்தத்திற்காக 140,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்

*2011 ஆம் ஆண்டின் க.பொ.த. உ/தரப் பரீட்சை பெறுபேறுகளில் குளறுபடிகள் ஏற்பட்டதை அடுத்து, இம்முறை விடைத்தாள் மீள்திருத்தத்திற்காக விண்ணப்பிப்பதற்காக ஜனவரி 17 ஆம் திகதி வரை வழங்கப்பட்டிருந்த கால அவகாசம் நிறைவடைவதற்குள் 140,000 மாணவர்கள் விண்ணப்பித்திருந்ததாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.*

*கடந்த 2010 ஆம் ஆண்டு விடைத்தாள் மீள்திருத்தத்திற்காக, விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, இது இருமடங்காகக் காணப்படுவதாக மேலும் கூறப்படுகின்றது.*



*அதன்படி, 2010 ஆம் ஆண்டில் 62,268 மாணவர்கள் மீள்திருத்தத்திற்காக விண்ணப்பித்திருந்தனர். மீள்திருத்தத்தினை அடுத்து அவர்களில் 989 பேரின் பெறுபேறுகள் மாத்திரமே மாற்றத்திற்குள்ளாகின. 2009 ஆம் ஆண்டில் 89,503 பேர் விண்ணப்பித்ததில் 1,026 பேரின் பெறுபேறுகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. 2008 ஆம் ஆண்டில் 60,667 பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் 4,289 பேரின் பெறுபேறுகளில் மாத்திரமே மாற்றங்கள் ஏற்பட்டன.*

*அத்துடன், மேற்படி மீள்திருத்தப் பணிகள் நிறைவடைவதை அடுத்து, பல்கலைக்கழக அனுமதிக்கான இஸட் புள்ளிகள் தரப்படுத்தல் பற்றித் தீர்மானிக்கப்படும் என மேலும் அறியக்கிடைக்கின்றது.*

### ஆயிரம் பாடசாலைகளுக்கு—

## பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளில் மூவாயிரம் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக கல்வி அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய,கடந்த வருடம் நடைபெற்ற போட்டிப் பரீட்சைகளின்மூலம் தகைமை பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இறுதித் தெரிவுகள் நடைபெற்று வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ் தெரிவாகியுள்ள பாடசாலைகளுக்கு ஆங்கிலம், தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்காகவே இந்த பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.



இதன்படி, ஆங்கில பாடத்திற்கு 1,000 ஆசிரியர்களும் தகவல்தொழில்நுட்ப பாடத்திற்கு 1,000 ஆசிரியர்களும் கணித பாடத்திற்கு 500 ஆசிரியர்களும் விஞ்ஞானப் பாடத்திற்கு 500 ஆசிரியர்களும் என மொத்தமாக மூவாயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சனத்தொகை மதிப்பீட்டுப் பணிகள் பெப்ரவரி மாதம் ஆரம்பம்

முழு இலங்கையிலும் சனத்தொகை மதிப்பீட்டின் மூன்றாம் கட்டம் பெப்ரவரி 27 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 19 ஆம் திகதி வரை நடைபெறவிருப்பதாக சனத்தொகை மதிப்பீட்டு புள்ளி விபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் முதல் இரண்டு கட்ட மதிப்பீட்டுப் பணிகளும் கடந்த வருடம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. தொகை மதிப்பு வரைபடம் தயாரித்தல், கட்டடங்களை நிரல்படுத்துதல் ஆகியனவே முதல் இரண்டு கட்டங்களில் நடைபெற்ற பணிகளாகும்.



எவ்வாறாயினும், கடந்த வருடம்தான் முழுமையான இந்தக் கணக்கெடுப்புக்கள் நடத்தப்படவிருந்தன. எனினும், இது தொடர்பான படிவங்களில் ஏற்பட்ட சில தவறுகளின் காரணமாகவே, இந்த நடவடிக்கைகளின் மூன்றாம் கட்டம் இந்த வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேற்படி கணக்கெடுப்பின் இறுதி அங்கமான தனிநபர்களைக் கணக்கெடுக்கும் நடவடிக்கைகள் மார்ச் 19 ஆம் திகதி நடைபெறும்.

முன் அட்டையில் வாசகர் முகம்

'விஜய்' முன் அட்டையில் இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்
**எஸ். கிஷோகாந்த்**
வெள்ளவத்தை


விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனத்தொகை அதிகரிப்பை மட்டுப்படுத்தலாமா?

இன்று மனித சமுதாயம் எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைவது சனத்தொகைப் பெருக்கமாகும். இதற்கமைய 1987 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை 500 (5 பில்லியன்) கோடியாக இருந்தது. அப்போது உலக நாடுகள் பலவற்றிலும் குடித்தொகையின் போக்கு, மற்றும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகள் என்பன உணரப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பிரதிபலனாக, உலக சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதன் அவசியம் உணரப்பட்டது. இதனை மக்களுக்கு உணர்த்துவதற்கான உந்துதலாக அமையும் நோக்கில் 1989 ஜூலை 11 ஆம் திகதி ஐ.நா. சபையின் பிரகடனத்துக்கமைய, சனத்தொகை தினம் வருடாந்தம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. பிறப்பு-இறப்பு வீத அடிப்படையில்







அமைக்கப்பட்ட 'உலக சனத்தொகைக் கடிகாரம்' (World Population Clock) இக்கணக்கெடுப்பை காலத்துக்குக் காலம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

உலக சனத்தொகை வளர்ச்சி 1850 இன் பின்னர் மிக விரைவாக வளர்ச்சியடையத் தொடங்கியது. 1840 இல் 100 கோடியாக இருந்த உலக சனத்தொகை 1927 இல் 200 கோடியாகவும், 1960 இல் 300 கோடியாகவும், 1999 இல் 600 கோடியாகவும் உயர்ந்து சென்று 2009 ஆம் ஆண்டில் 676 (6.76 பில்லியன்) கோடியை எட்டியது. 2009 ஆம் ஆண்டளவில் 1.31 வீதத்தால் அதிகரித்த உலக சனத்தொகையானது, நாளொன்றுக்கு 223,093 பேராக வருடத்திற்கு 81,430,910 பேர் என்ற நிலையில் அதிகரித்துக் கொண்டிருப்பதாக அமெரிக்கா சனத்தொகைக் கணிப்பீட்டுப் பணியகம் தகவல் வெளியிட்டுள்ளது. 1950 இல் 253 (2.5 பில்லியன்) கோடியாக இருந்த உலக சனத்தொகை 2010 இல் 685 (6.85 பில்லியன்) கோடியாக உயர்ந்து, 2050 ஆம் ஆண்டில் 915 (9.15 பில்லியன்) கோடியை எட்டிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. உலக சனத்தொகை வளர்ச்சி இதே வேகத்தில் சென்றால் 2075 ஆம் ஆண்டளவில் 1000 கோடியைத் தாண்டிவிடும் என நம்பப்படுகின்றது.

பொதுவாக, வறுமைக்கோட்டின் கீழுள்ள ஆபிரிக்க நாடுகளின் தற்போதைய சனத்தொகை வளர்ச்சி வீதம் 13 ஆகும். இது அடுத்த 300 ஆண்டுகளில் 24 ஆக உயரும் அதே நேரத்தில் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடைந்து காணப்படும் ஐரோப்பிய நாடுகளின் 12 வீதமாக இருக்கும் தற்போதைய சனத்தொகை வளர்ச்சி வீதம் 7 ஆகக் குறைகின்ற வாய்ப்பு உள்ளதாகவும் ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

உலகில் சனத்தொகை அதிகரித்துள்ள நாடுகளில் சீனா, இந்தியா, அமெரிக்கா, நைஜீரியா, பாகிஸ்தான், கொங்கோ, எதியோப்பியா, பங்களாதேஷ் போன்ற நாடுகள் ஐ.நா. சபையால் இனம் காணப்பட்டுள்ளன. 2010 ஆம் ஆண்டினது உலக சனத்தொகைக் கடிகாரத்தின்படி, சீனாவில் சதுர மீற்றருக்கு 136 பேர் வாழ்கின்றனர். இந்தியாவின் சனத்தொகை 112.25 கோடியாகும். இது உலக சனத்தொகையில் ஆறில் ஒன்றாகும். அத்துடன், உலக மொத்த நிலப்பரப்பில் 24 வீதத்தை இந்தியா கொண்டுள்ளது. உலக சனத்தொகையில் 37 வீதத்தை சீனாவும் இந்தியாவும் கொண்டுள்ளன. இன்னொரு முறையில் கூறுவதானால், உலக சனத்தொகையின் அரைப்பங்கு மக்கள் ஆசிய நாடுகளிலேயே வாழ்கின்றனர். இங்கு உலக சராசரியைவிட, அதிகமான வீதத்தில் சனத்தொகை வளர்ச்சியடைகின்றது. இதனால், ஆசியாவே சனத்தொகை அதிகரிப்புப் பிரச்சினையின் மையமாக விளங்குகின்றது.

நெருக்கமான சனத்தொகையையும் விரைவான சனத்தொகை வளர்ச்சியையும் கொண்டுள்ள நாடுகளில் பொருளாதார உற்பத்திப் பெருக்கத்தால் வாழ்க்கைத்தரம் உயர முடியாதுள்ளது. ஆரோக்கியம், பாடசாலைக் கல்வி, வீட்டு வசதி, வேலைவாய்ப்பு, போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, உணவு, நீர் முதலியன மட்டுமல்லாது; சுவாசிக்கின்ற காற்றும் சனத்தொகை அதிகரிப்பினால் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

உலக சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதில் இறப்பை அதிகரித்தல் அல்லது பிறப்பைக் குறைத்தல் என்ற இரண்டு காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இறப்பை அதிகரித்தல் விரும்பத்தக்கதல்ல என்பதற்குக் காரணங்களோ, உரிய விளக்கமோ தேவையில்லை. மாறாக பிறப்பைக் குறைத்தலே சனத்தொகைக் கட்டுப்பாட்டிற்கான ஒரே மாற்று வழியாகும். இதற்கான அறிவும் பக்குவமும் மக்களிடத்தில் ஏற்படுத்தப்படுமாயின் சனத்தொகை கட்டுப்பட வாய்ப்புண்டு.


தற்போதைய உலக மக்கள் தொகையில் பாதிப்பேர் 25 வயதிற்குட்பட்டோராவர். 1950 இல் உலக சனத்தொகையில் 19 வயதிற்குட்பட்டோராக 44 வீதம் பேர் இருந்தனர். 2000 ஆம் ஆண்டில் 39 வீதமாக அத்தொகை குறைந்து 2050 ஆம் ஆண்டில் 27 வீதமாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறே, 1950 இல் உலக சனத்தொகையில் 20 வயதிற்கும் 64 வயதிற்கும் உட்பட்டோராக 51 வீதமாக இருந்தோர், 2000 இல் 54 வீதமாக அதிகரித்து, 2050 ஆம் ஆண்டில் 57 வீதமாக மேலும் அதிகரித்துச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறே, 1950 இல் 5 வீதமாக இருந்த 65 வயதிற்கு மேற்பட்டோர் 2000 ஆம் ஆண்டில் 7 வீதமாகி, 2050 ஆம் ஆண்டளவில் 16 வீதமாக அதிகரித்துவிடும் என்பதால், எதிர்காலத்தில் உலகில் முதியோர் அதிகரித்தும் இளைய சந்ததியினர் குறைந்துவிடும் நிலையும் ஏற்பட வாய்ப்புண்டு.

2010 ஆம் ஆண்டினது உலக சனத்தொகைக் கடிகாரத்தின்படி, அமெரிக்காவின் சனத்தொகை 30.9 கோடியாகும். உலகில் சனத்தொகை அடர்த்தியான நகராக டோக்கியோ இடம்பிடித்துள்ளது. இங்கு 12 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இது ஜப்பானின் மொத்தக் குடித்தொகையில் 10 வீதமாகும். சனத்தொகை குறைந்த உலக நாடுகளில் முதலிடம் வகிப்பது பிட்கேயன் தீவுகளாகும். இங்கே 50 பேர் வாழ்கின்றனர். சனத்தொகை குறைந்த நாடுகளில் இரண்டாம் இடத்தில் இருக்கும் வத்திக்கானில் சுமார் 800 பேர் மட்டுமே வாழ்வதாக 2008 ஆம் ஆண்டின் 'உலக சனத்தொகைக் கடிகாரத்தின்' மூலம் அறிய முடிகின்றது.

இலங்கையில் 1965 இல் 5.19 வீதமாக இருந்த கருவள வீதம் 1975 இல் 3.6 வீதமாகக் குறைந்து, 1995 முதல் 2000 வரை 1.96 வீதமாக மேலும் குறைந்து செல்கின்றது. கருவளக் குறைவிற்கான முக்கிய காரணங்களாக பெண்கள் கல்வியில் ஈடுபாடு, திருமணத்தில் ஏற்பட்ட மாற்றம், குடும்பக்கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வு, தொழில், அந்தஸ்து அதிகரிப்பு என்பவற்றைக் குறிப்பிடலாம். 2000 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதமானது 1.37 ஆகும். இது தற்போது 1.1 வீதமாகி, எதிர்காலத்தில் 0.45 வீதமாகக் குறையலாம் என ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

குடித்தொகைப் பெருக்கத்தினால் உலகில் ஏற்படும் பாதிப்புகளில் முக்கியமானதாக உணவு, நீர் பற்றாக்குறையைக் குறிப்பிடலாம். அதற்கடுத்தபடியாக காடுகள் அழிக்கப்படுதல், சூழல் மாசடைதல், சமூகச் சீர்கேடு, சுகாதாரப் பாதிப்பு, போக்குவரத்து நெரிசல், வேலையில்லாமை, நிலப்பற்றாக்குறை என்பன இனங்காணப்பட்டுள்ளன.

**ஐ.ஏ.ஸத்தார்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வழிநடந்து மறுமையில் வெற்றி பெறுவோம்!



"நபியே! நாம் உம்மை அகிலத்தாருக்கெல்லாம் ஓர் அருட்கொடையாகவேயன்றி அனுப்பவில்லை"
(அல்-குர்ஆன் 21: 107)

மேற்கூறப்பட்டுள்ள அல்-குர்ஆன் வசனத்திற்கேற்ப, அகிலத்தாருக்கெல்லாம் ஓர் அருட்கொடையாக இவ்வுலகில் பிறந்தவர்தான் இறுதித் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள். இவ்வுலகில் மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்காக, அல்லாஹுத்தஆலா புனித அல்-குர்ஆனை அவருக்கு அருட்கொடையாக வழங்கி,உலக வாழ்க்கைக்கான சிறந்த வழிகாட்டலைச் செய்வதற்கு அதன்மூலம் வழியமைத்தான். மேலும், சாட்சியாளராகவும் நற்செய்தி கூறுபவராகவும் அல்லாஹுத்தஆலாவின் பக்கம் மக்களை அழைக்கும் அழைப்பாளராகவும் அவரை ஆக்கினான்.

அல்லாஹுத்தஆலாவின் கட்டளைப்படி, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தனக்கு அருளப்பட்ட இறைத்தூதை தமது சொல், செயல், வழிகாட்டல்கள், ஒழுக்கமுறைகள் என்பனவற்றின்மூலம் மனித குலத்திற்கு எடுத்துக்கூறி, விளங்க வைத்தார்கள். அதன்படி, தீமைகளைக் களைந்து நன்மைகளின் பக்கம் மக்களை நாட்டம் பெறச் செய்தார்கள். எனவே, அல்லாஹுத்தஆலாவின் திருத்தூதரும் இறுதித்தூதருமான முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பற்றி சற்று நோக்குவோம்.

## பிறப்பும் இளமைப் பருவமும்

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கி.பி. 571 ஆம் ஆண்டு இஸ்லாமிய வருடக் கணக்கின்படி, ரபியுல் அவ்வல் மாதம் பிறை 12 இல் அரேபியாவின் மக்கா நகரில் பிறந்தார். இவரது தந்தை பெயர் 'அப்துல்லாஹ்' ஆகும். தாயார் பெயர் 'ஆமினா' ஆகும். நபியவர்கள் பிறப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் அவரது தந்தையார் உயிரிழந்து விட்டார். அவருக்கு ஆறு வயதாக இருக்கும்போது தாயாரும் உயிரிழந்துவிட்டார். எனவே,பாட்டனார் அப்துல் முத்தலிப்பின் பராமரிப்பிலும் பாட்டனாரின் மறைவை அடுத்து, பெரிய தந்தை அபூதாலிப்பின் போஷிப்பிலும் வளர்ந்து வந்தார்.

நபி (ஸல்) அவர்கள் சிறுவயது முதல் இறைபக்தி, உண்மை பேசுதல், நல்லொழுக்கம், பிறருக்கு உதவுதல் போன்ற நற்குணங்களால் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்தார்கள். தமது வாலிபப் பருவத்தில் வணிகத்தில் ஈடுபாடு காட்டி வந்தார்கள். வியாபாரத்தில் நேர்மை,வாக்குறுதி மாறாமை, நம்பிக்கை என்பனவற்றைக் கடைப்பிடித்து அனைவரினதும் விருப்பத்திற்குரியவராகத் திகழ்ந்தார்கள். இக்காலகட்டத்தில் மக்காவில் வணிகத்தில் சிறந்து விளங்கிய கதீஜா அம்மையார், நபி (ஸல்) அவர்களின் நற்பண்புகள் பற்றிக் கேள்விப்பட்டு, தமது வியாபார நடவடிக்கைகளில் பங்கேற்கும்படி அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். அதை ஏற்றுக்கொண்ட நபி (ஸல்) அவர்கள், சிறப்பாக வணிகம் செய்து வந்தார்கள்.நாளடைவில், நபியவர்களின் உயரிய பண்புகளால் பெரிதும் கவரப்பட்ட விதவைப் பெண்மணியான கதீஜா அம்மையார், நபி (ஸல்) அவர்களின் சம்மதத்துடன் அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு இவரே முதல் மனைவியாவார். இவரது மரணத்தை அடுத்தே, நபி (ஸல்) அவர்கள் வேறு பெண்களை மணம் முடித்தார்கள். முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் ஏழு பிள்ளைகளில் மூன்று ஆண் பிள்ளைகளும் சிறு வயதிலேயே மரணித்து விட்டன.

### முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் சிறப்பு பற்றிய அல்-குர்ஆன் வசனங்கள் சில..

* "உங்களில் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் நினைவு கூருவோருக்கு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது." (அல்-குர்ஆன் 33:21)
* "மேலும், (நபியே!) நாம் உம்மை மனிதர்கள் அனைவருக்கும் நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமேயன்றி அனுப்பவில்லை. ஆனால், மனிதர்களில் பெரும்பாலானோர் (இதை) அறியமாட்டார்கள்." (அல்-குர்ஆன் 34:28)
* "(நபியே!) நிச்சயமாக மகத்தான நற்குணம் உடையவராக நீர் இருக்கின்றீர்." (அல்-குர்ஆன் 68:4)
* "(நபியே!) சொல்லில் கடுகடுப்பானவராக, இரக்கமற்ற இதயமுள்ளவராக நீர் இருந்திருப்பீரானால், உம்மைச் சூழ உள்ளோர் உம்மிடமிருந்து பிரிந்து சென்றிருப்பார்கள்." (அல்-குர்ஆன் 3:159)
* "நபியே! நீர் கூறுவீராக! மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றேன். வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்குரியது. அவனைத் தவிர வேறு யாரும் இல்லை. ஆகவே, அல்லாஹ்வின் மீதும் எழுதப்படிக்கத் தெரியாத நபியாகிய அவன் தூதர் மீதும் ஈமான் கொள்ளுங்கள். அவரும் அல்லாஹ்வின் மீதும் அவன் வசனங்களின் மீதும் ஈமான் கொள்கிறார். அவரையே பின்பற்றுங்கள். நீங்கள் நேர்வழி பெறுவீர்கள்." (அல்-குர்ஆன் 7:158)

## 'நுபுவ்வத்' எனும் நபித்துவம்


முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் நாற்பது வயதை அடையும்போது, மக்காவிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள ஹிரா குகைக்குச் சென்று தனித்திருந்து வணக்கவழிபாடுகளிலும் உலக சிந்தனைகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். அவ்வாறு ஹிரா குகையில் தனித்திருந்த காலத்தில் ரமழான் மாதத்தின் ஒரு நாளில், அல்லாஹுத்தஆலா அகிலத்தாருக்கு தனது கருணையைப் பொழிய நாடி, முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு நபித்துவத்தை வழங்கி சிறப்பிப்பதற்காக புனித அல்-குர்ஆனின் சில வசனங்களை வானவர் ஜிப்ரீல் (அலை) மூலம் அனுப்பி வைத்தான். அன்றிலிருந்து தொடர்ந்து 23 வருடங்களாக, சந்தர்ப்பங்களுக்கேற்ப முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு அல்-குர்ஆன் முழுவதும் இறக்கியருளப்பட்டது.

நபித்துவம் வழங்கப்பட்டதை அடுத்து, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இஸ்லாத்திற்காக மக்களை அழைக்கும் பணியில் மறைமுகமாக ஈடுபட்டார்கள். பின்னர் சிறிது காலம் கழித்து பகிரங்க அழைப்பு விடுத்தார்கள். இந்த நடவடிக்கைகளை அடுத்து முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கும் அவரது சகாக்களுக்கும் மக்காவில் பல்வேறு எதிர்ப்புக்களும் சோதனைகளும் தொடர்ந்தன. எனவே, காலப்போக்கில் அல்லாஹுத்தஆலாவின் கட்டளைக்கிணங்க, மக்காவை விட்டு மதீனாவுக்குச் சென்றார்கள். இதுவே, 'ஹிஜ்ரத்' (ஹிஜ்ரா) எனப்படுகின்றது. இந்நிகழ்வு நபியவர்களின் 53 ஆவது வயதில் இடம்பெற்றது. இதன் பின்னரும் பல்வேறு யுத்தங்கள் உட்பட, சோதனைகளுக்கும் அவர்கள் முகம் கொடுத்தார்கள். எனினும், அல்லாஹுத்தஆலாவினதும் இஸ்லாத்தினதும் மீதான அவர்களின் நம்பிக்கையும் உறுதியும் சற்றும் தளரவில்லை. இதனாலேயே, பிற்காலத்தில் அவர்களுக்கு வெற்றிகள் கிட்டின. அதற்கமைய, ஹிஜ்ரி 8 இல் மக்கா வெற்றி கொள்ளப்படுகின்றது. இந்த வெற்றியினூடாக, அல்லாஹுத்தஆலா இஸ்லாத்திற்கும் தனது தூதருக்கும் தன்னை விசுவாசம்கொண்ட அடியார்களுக்கும் கண்ணியத்தை வழங்கினான்.

## இறுதிக்காலம்

இஸ்லாத்திற்கான அழைப்புப் பணி நிறைவுற்று, இஸ்லாத்தின் வெற்றி நிலைநிறுத்தப்பட்டதை அடுத்து. இவ்வுலக வாழ்க்கையிலிருந்து தாம் விடைபெறும் நேரம் நெருங்கி விட்டதை நபி (ஸல்) அவர்கள் உணரலானார்கள். ஹிஜ்ரி 10 ஆம் ஆண்டில் ஹஜ் கடமையை நிறைவேற்றச் சென்றார்கள். அங்கு அரபா மைதானத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்கும் போது, 'ஹஜ்ஜதுல் விதா' எனும் இறுதி உபதேசத்தை நிகழ்த்தினார்கள். அந்த உரையில் மக்களுக்காக, பல்வேறு நல்லுபதேசங்களையும் நல்லறிவுரைகளையும் வழங்கினார்கள். அவையனைத்தும் இவ்வுலகில் மனிதர்கள் சிறப்பாக வாழ்ந்து அல்லாஹுத்தஆலாவின் திருப்தியைப் பெற்றவர்களாய் மறுமையில் வெற்றி பெறுவதற்கு சிறந்த வழிகாட்டலை வழங்குவதாக அமைந்திருந்தன. இதன்பின்னர், ஹிஜ்ரி 11 ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் பிறை 12 இல் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தமது 63 ஆவது வயதில் மரணத்தைத் தழுவினார்கள் (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்).

-ஜீநு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களிமண்

**'ஏழைகளின் உலோகம்' என்றும் 'களிமண் தந்த வெள்ளி' என்றும் வர்ணிக்கப்படும் அலுமினியத்தால் செய்யப்பட்ட பாத்திரங்கள், மட்பாண்டங்களுக்கு அடுத்தபடியாக வாங்கக்கூடிய பொருளாக விளங்குகின்றன. களிமண் மற்றும் செங்கல் போன்றவை அனைத்தும் அலுமினிய சிலிகேட் என்ற சேர்மானப் பொருள்தான். அலுமினியக் கலவைப் பொருள் என்று தெரியாமலேயே நெடுங்காலமாக இப்பொருட்களை மக்கள் பயன்படுத்தி வந்தனர்**


## நவரத்தினங்களில் அலுமினியம்

மண்ணிலிருந்து கிடைக்கும் நவரத்தினங்களாகிய மரகதம் (Ruby), செந்நிறக்கல் (Garnet), நீலக்கல் (Sapphier) மற்றும் பசுமை கலந்த நீலக்கல் (Turquoise) போன்றவற்றில் அலுமினியம் ஒரு சேர்மானப் பொருளாகச் சேர்ந்திருக்கின்றது. அலுமினியத்தைக் களிமண்ணிலிருந்து தனித்துப் பிரித்தெடுத்தபோது, அது வெள்ளி போன்று பிரகாசமான மினுமினுப்பைக் கொடுத்தமையால்; 'அரிய உலோகம்' என்றெண்ணி, அப்போது அதைக் களிமண் தந்த வெள்ளி என்று மக்கள் வியந்தனர்.

## சக்கரவர்த்தி டைபெரியஸ்

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் பரிசுத்த உரோமப் பேரரசை 'டைபெரியஸ்' என்ற சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். சக்கரவர்த்தியைச் சந்திக்க அரண்மனைக்குச் சென்ற ஒருவன் அவரை மகிழ்விக்க எண்ணிக் கனமில்லாத இலகுவான வெள்ளி போன்று பளபளக்கின்ற களிமண் தந்த வெள்ளிக் கோப்பையைப் பரிசாக அளித்தான். அதுபற்றி முன் ஒருபோதுமே அறியாத சக்கரவர்த்தி அவனிடமிருந்து பல விபரங்களைக் கேட்டறிந்தார். அவனோ அப்புதிய உலோகம் களிமண்ணிலிருந்து பிரித்தெடுத்தது என்றும் விளக்கமளித்தான்.

டைபெரியஸின் குறுகிய மனமோ வேறு விதமாகச் சிந்தித்தது. மேன்மையானதாகவும் சிறந்த பண்புகளைக் கொண்டதாகவும் தோன்றுகின்ற இந்த மலிவான புதிய உலோகம் தன்னுடைய கஜானாவில் உள்ள தங்கத்தையும், வெள்ளியையும் மதிப்பில்லாமல் செய்துவிடலாம் என அஞ்சினான். உடனே, தன்னுடைய காவலாளியை அழைத்து தனக்கு பரிசளித்த அந்த மனிதனின் தலையைக் கொய்து விடுமாறும் அவனது பணிமனையை முற்று முழுதாக அழித்து விடுமாறும் கட்டளை இட்டான். அன்றோடு உயிரைப் பறிக்கும் அப்புதிய உலோகத்தை உற்பத்தி செய்யவேண்டும் என்ற துணிவு எவருக்கும் எழவில்லை அத்தோடு 'உயிருக்கு அபாயம் தரக்கூடிய உலோகம்' என்ற அடைமொழி வேறு அலுமினியத்திற்கு வந்தது. உண்மையில் நெடுங்காலத்திற்குப் பின்பே அந்த அடைமொழி நீங்கியது.





## விஞ்ஞானியான ஓர்ஸ்டட்

டென்மார்க் விஞ்ஞானியான ஓர்ஸ்டட்(Oersted) என்பவரே 1825 இல் தூய உலோக அலுமினியத்தைப் பிரித்தெடுப்பதில் வெற்றி கண்டவராவார். இவரைத் தொடர்ந்து ஜேர்மனியரான வோலர் (Wohler) அலுமினியத்தைப் பிரித்தெடுக்க முயன்று, மிகச்சிறிய அளவில் அலுமினிய உலோகத்தைப் பெற்றார். அன்று முதல் இப்புதிய உலோகம் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. மிக நுண்ணிய அளவில் மட்டுமே அப்போது அலுமினியத்தை உற்பத்தி செய்ய முடிந்ததால், அது விலைமதிப்பு மிக்க ஓர் உலோகமாகக் கருதப்பட்டது.

## விலை வீழ்ச்சி

ஆரம்பத்தில் அலுமினியம் பெரும் ஆடம்பரப் பொருளாகக் கருதப்பட்டது. ஐரோப்பிய மகாராணிகள் சிலர் தமது ஆடைகளில் அலுமினியப் பொத்தான்களைத் தைத்துத் தமது ஆடம்பரத்தை வெளிப்படுத்தினர். 1855 இல் 'களிமண்ணிலிருந்து வெள்ளி' என்ற தலைப்புடன் ஒரு வகையான புதிய உலோகத்தைத் தனித்துப் பிரித்தெடுக்கும் வழிமுறை பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற ஒரு வணிகச் சந்தையில் செய்துகாட்டப்பட்டது. அதன் பின்னர் வர்த்தக முறையில் அலுமினியம் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டதால், விலை மதிப்பான உலோகம் என எண்ணிய அலுமினியம் ஓரளவு எளிதாக அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக மாறியது. உற்பத்தி வீதம் அதிகரிக்க அப்போதிருந்த அலுமினியத்தின் விலை மதிப்பு மெல்ல வீழ்ச்சியுற்றது.

## மூன்றாம் நெப்போலியன்

அலுமினியத்தின் விலை மதிப்பு இவ்வாறு மாறுதல்களுக்கு இலக்காக ஆரம்பித்த காலத்தில் பிரான்ஸ் நாட்டை 3 ஆம் நெப்போலியன் ஆண்டு வந்தான். ஒருமுறை அவன் தன் அரண்மனையில் பெரும் விருந்தொன்றை வைத்தான். அப்பொழுது அரச பரம்பரையினருக்கும் சில அதிமுக்கிய பிரமுகர்களுக்கு மட்டும் அலுமினியத்தாலான தட்டும் கரண்டியும், முள்கரண்டி, கோப்பையையும் அளித்தான். ஏனைய சாதாரண விருந்தாளிகளுக்கு எப்பொழுதும் வழங்கப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளியிலான பொருட்கள் வழங்கப்பட்டன. தங்கம், வெள்ளியை விட அலுமினியம் விலை மதிப்பானது என முதன்முதல் கருதப்பட்டதே இதற்குக் காரணமாகும்.




## மின்னாற் பகுப்பு முறை

1886 இல் அமெரிக்க நாட்டின் ஹோல் (Hall) மற்றும் பிரான்ஸ் நாட்டின் ஹெரௌல்ட் (Heroult) ஆகியோர் மின்னாற் பகுப்பு முறை மூலம் வர்த்தக முறையில் அலுமினிய உற்பத்திக்கு வழிகாட்டினர். அதன்பின் அலுமினியம் ஓர் அரிய உலோகம் என்ற கருத்து மாறி அதன் விலையிலும் பெருவீழ்ச்சி காணப்பட்டது.

## அலுமினியத்தைப் பெறும் முறை

அலுமினியத்தின் முக்கியமான கனிமம் பொக்சைட் ஆகும். இதில் இரும்பு ஒக்ஸைட், டைட்டானியம் மற்றும் சிலிகான் ஆகியவை வேற்றுப் பொருளாகக் கலந்துள்ளன. பொக்சைட்டைத்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ன் தந்த வெள்ளி
# அலுமினியம்’


பேயர்


வோலர்


ஓர்ஸ்டட்


ஹெறௌல்ட்

தூய்மைப்படுத்தி $Al_2O_3$ என்று குறிப்பிடப்படுகின்ற அலுமினாவைப் பெற்று மின்னாற் பகுப்பு மூலம் அலுமினியத்தைப் பெறலாம். இதனையும் தூய்மைப் படுத்தி தூய அலுமினியத்தை உற்பத்தி செய்ய முடியும். அலுமினா மிகவும் நிலைப்புத்தன்மை மிக்க ஒரு சேர்மப் பொருள்.

பூமியில் உள்ள கனியங்களின் இருப்பு எண் வரிசையில் அலுமினியம் மூன்றாவது இடத்தில் இருந்தாலும் அதன் ஒக்ஸைடிலிருந்து அலுமினியத்தைத் தனித்துப் பிரிப்பது கடினமாக இருந்ததால் அதைக் கண்டுபிடிக்க நீண்ட காலம் எடுத்தது. அலுமினாவை உயர் வெப்பநிலையில் மட்டுமே பகுக்க முடியும். இது 2050° செல்சியஸ் வெப்பநிலையில் உருகுகின்றது. எனவே, அலுமினாவை மின்னாற் பகுத்துப் பிரிப்பதற்கு மிகுந்த அளவு மின்னாற்றல் தேவைப் படுகின்றது. பொக்சைட்டில் அதிக அளவில் இரும்பு ஒக்ஸைட் இருக்குமானால் அதைச் சிவப்பு பொக்சைட் என்பர். பேயர் (Baeyer) முறை மூலம் இதிலிருந்து அலுமினியத்தைப் பெறலாம்.



## அலுமினியத்தின் பயன்கள்

அலுமினியம் நல்ல கடத்தியாக விளங்குவதால் வெப்பத்தையும், மின்சாரத்தையும் எளிதாகக் கடத்துகின்றது. தங்கம், வெள்ளி, செம்புக்கு அடுத்தபடியாகச் சிறந்து விளங்கும் கடத்தியாக அலுமினியமே திகழ்கின்றது. இதனால், வெப்பம் உணர்கருவிகளுக்குத் தேவையான வெப்பக் கடத்தியாகவும், மின்சாதனங்களுக்குத் தேவையான மின்கம்பியாகவும் அலுமினியம் பயன்படுத்தப்படுகின்றது. அலுமினியத்தின் வெப்பம் கடத்தும் திறனானது, அதைப் பாத்திரங்களாக வார்த்து சமையலுக்காகப் பயன்படுத்துவதற்கு ஏற்றதாக இருக்கின்றது. கிடைக்கும் வெப்பத்தைச் சுற்றுப்புறத்தில் இழந்துவிடாமல், உட்புறமாகக் கடத்தி, சமைக்க வேண்டிய பொருளை விரைவில் சமைத்துவிடுவதற்கு இது அனுகூலமாக இருக்கின்றது.

அலுமினியத்தின் மின் கடத்தும் திறன், அதை மின் கம்பியாகப் பயன்படுத்த அனுகூலமாய் இருக்கின்றது. விலை அதிகம் என்பதால் செம்புக் கம்பிகளுக்குப் பதிலாக அலுமினியக் கம்பிகளையே மின்சாரத்துறையினர் பரவலாகப் பயன்படுத்துகின்றனர். மின்சாரத்தை தொலைதூரத்திற்கு எடுத்துச் செல்லும் மின்கம்பிகளாக அலுமினியத்தை பயன்படுத்தும்போது, தடித்த கம்பிகளாக்கி மின் தடையைப் போதிய அளவு தாழ்த்திக்கொள்கின்றார்கள். இதனால், மின் இழப்பு பெருமளவு குறைக்கப்படுகின்றது. அலுமினியத்தை மெல்லிய தாளாகவும் வடிக்க முடியும் என்பதால், விற்பனைப் பொருட்களுக்குத் தக்க உறைகளாக பயன்படுத்தப்படுகின்றது. தூய அலுமினியமானது,புற ஊதாக் கதிர்களுக்கு ஒளிமின் எலக்ட்ரோன்களை உமிழ்கின்றது. இதனால், அலுமினியம் புற ஊதாக் கதிர்களை ஆராயும் ஆய்வுக் கருவிகளில் பயன்படுத்தப்படுகின்றது.

## விமானங்களை வடிவமைத்தல்

அலுமினியம் மிகவும் இலேசான உலோகமாக இருப்பதால் விமானங்களை வடிவமைக்க அலுமினியத்தையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். இதில் டுராலுமின் (Duralumin), நிக்கலோய் மற்றும் சிலுமின் (Silumin) முக்கியமானவை. மற்றொரு அலுமினியக் கலப்பு உலோகமாகிய நிக்கலொயில், விமானத்தின் இயந்திர உறுப்புகளை உருவாக்கப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. அலுமினியமும் சிலிகானும் கலந்து உருவாவது தான் சிலுமின். இது மரச்சாமான்கள் மற்றும் வெகியூம் கிளீனர் (Vaccum Cleaner) போன்ற சாதனங்களின் உட்கூறுகளில் பயன்படுத்தப்படுகின்றது.

## பல்வேறு பொருட்கள்

ஆழ்கடல் நீர் மூழ்கிக் கலன்கள் (Aluminaut) செயற்கை கோள்களுக்கான கூண்டுகள், ஏவூர்தி மற்றும் ஏவுகணைகளின் பாகங்கள் போன்றவைகள் வடிவமைக்கப் பயன்படுத்தப்பட்டன. அண்டெனா என்ற உணரிச் சட்டங்கள் மின்காந்த அலைகளை வெளியில் பரப்புவதற்கும் உள்வாங்குவதற்கும் பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் கட்டமைப்பிற்கு வலுவூட்டப்பட்ட அலுமினியம் பயனளிக்கின்றது. அலைச் செலுத்திகள் (Wavaguides), உயர் மின்னழுத்தச் செலுத்திகள், மின்மாற்றிகளுக்கான வரிச்சுற்றுகள், மின்வடங்கள், மின்தேக்கிகள் போன்ற பலவற்றால் மின்துறை, அலுமினியத்தை அதிகம் பயன்படுத்தும் துறையாக வளர்ந்து வருகின்றது.

தாழ்ந்த வெப்பநிலை பயன்களுக்கு அலுமினியமும் அலுமினியக் கலப்பு உலோகங்களும் பயன்தருகின்றன. எதிர் காலத்தில் ஏவுகணை, விண்வெளிப் பயணம், ஏவூர்தித் தொழில்நுட்பம் வளர்ச்சி பெறுவதற்கான தேவை அதிகரிக்கும். இரசாயனவியலாளர்கள் அலுமினியத்தைப் பற்றி மற்றொரு உண்மையைக் கண்டுபிடித்துள்ளனர். அலுமினியம் உயிர்காக்கும் விற்றமின்களைச் சிதைத்து அழிப்பதில்லை என்பதே அந்த உண்மையாகும். இதனால், வெண்ணெய் உற்பத்தி, சீனி ஆலைகள், மிட்டாய் மற்றும் மது உற்பத்தி நிலையங்களில் அலுமினியத்தாலான சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.


## அலுமினியத்தின் மற்றொரு பயன்பாடு பலானியம்

பலானியம் (Planium) என்ற புதிய வகை வர்த்தகப் பொருள் அலுமினியத்தின் மற்றொரு பயன்பாடாகும். இது அலுமினியத்தால் மேற்பூச்சிடப்பட்ட ஒருவகை நெகிழ்மமாகும். (Plastic) நெகிழ்மப் பொருட்களின் அனுகூலமானது அவை இலேசானவையாக இருப்பதோடு பல வண்ணங்களையும் ஏற்ற முடியும். ஓரளவு அழுத்தத்தையும் தாக்குப் பிடிக்க கூடியவை. இன்று மேற்கூரை வேய்தல், தானியங்கு ஊர்திகள், குளிர் சாதனப் பெட்டி, சொக்லெட் பெட்டிகளின் உட்புறம் மற்றும் மேற்புறங்களில் தரவரிசையிடுல், கையலம்பும் தொட்டி, அலங்காரத் தட்டி, கண்காட்சி, விழாக்களுக்கான தற்காலிக தடுப்புச் சுவர்கள் போன்ற பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பலானியம் பெரிதும் கைக்கொடுக்கின்றது. அத்துடன் காகித நாணயத்திற்கு பலானியம் நற்பலனளிக்கின்றது. பல நாடுகளில் பலானிய நோட்டுக்களை அச்சடித்துப் புழக்கத்தில் விட்டுள்ளனர்.

அலுமினிய இழைகளாலான, 0.009 மில்லி மீற்றர் தடிப்புள்ள அஞ்சல் வில்லைகள் முதன்முதலாக ஹங்கேரி நாட்டில் வெளியிடப்பட்டன. அதன்பின்னர் பல நாடுகள் அலுமினியத்தாலான அஞ்சல் வில்லைகளை வெளியிட்டுள்ளன. அத்துடன் மெல்லிய அலுமினியப் பூச்சிடப்பட்ட இழைகளாலான அலுமினியத் துணியையும் நெய்துள்ளனர். இது கோடையில் வெப்பத்திலிருந்தும், குளிர்ச்சியிலிருந்தும் பாதுகாப்பளிக்கின்றது.

**இரஞ்சித் ஜெயகர்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ்தோனியா


அலெக்சென்டர் நெஸ்கி தேவாலயம்

**மொழிகள்**(2000):எஸ்தோனிய மொழி 67% (அலுவலக மொழி), ரஷ்யமொழி 30%, ஏனைய மொழிகள் 3%.
**பிரதான இனக்குழுவினர்கள்** (2001): எஸ்தோனியர்கள் 67.9%, ரஷ்யர்கள் 25.6%, உக்ரேனியர்கள் 2.1%.
**பிரதான சமயங்கள்** (2001): லூதரன் திருச்சபை 14%, ரஷ்ய ஆர்த்தடொக்ஸ் கிறிஸ்தவம் 13%, சமயம் குறிப்பிடாதவர்கள் 34%, மதமற்றோர் 6%.
**எழுத்தறிவு** (2003): 100%
**இணையத்தளக் குறியீடு:** .ee
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 372.
**தேசிய கீதம்**
Mu isamaa, mu õnn ja rõõm,
kui kaunis oled sa!
Ei leia mina iial teal
see suure, laia ilma peal,... என ஆரம்பமாகின்றது.


தலைநகரின் வான்வழித் தோற்றம்

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட பல கட்சி நாடாளுமன்றக் குடியரசு.
**சுதந்திரம்:** ரஷ்யாவிடமிருந்து உள்ளக ஆளுகைப் பிரகடனம் -1917 ஏப்ரல் 12; சுதந்திரப் பிரகடனம் - 1918 பெப்ரவரி 24; உத்தியோகபூர்வ பிரகடனம் - 1920 பெப்ரவரி 2; சோவியத்திலிருந்து விடுவிப்பு - 1991 ஓகஸ்ட் 20.
**தேசிய பெயர்:** ஈஸ்ட்டி வெபரிக்.
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய பெப்ரவரி 24.
**ஜனாதிபதி** (2006): டூமாஸ் ஹென்றிக் இல்விஸ்.
**பிரதமர்** (2005): அன்ட்ரூஸ் அன்சிப்.

## புவியியல்

எஸ்தோனியாவின் தென் மேற்கு மற்றும் வடக்கில் போல்டிக் கடலும் வடக்கு மற்றும் தென்மேற்கில்





ரிகா மற்றும் பின்லாந்து வளைகுடாக்களும் கிழக்கில் ரஷ்யாவும் தெற்கில் லத்வியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன. நாட்டின் பெரும்பகுதி நீரால் சூழப்பட்டுள்ளதோடு, சமதரை நிலத்தோற்றத்தையும் 3,794 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையையும் கொண்டுள்ளது. அதிகளவிலான குடாக்கள், முனைகள், நீரிணை மற்றும் ஏரிகளையும் கொண்டுள்ளது. சுமார் 1,500 இற்கும் மேற்பட்ட சிறுதீவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. பீப்பஸ், பிஸ்கோவ் (ரஷ்யாவுடன் பகிர்ந்துகொள்கின்றது), வோட்ஸ்ஜாவ் என்பன எஸ்தோனியாவின் பெரிய ஏரிகளாகும். எமோஜோகி, மனமாகி, பார்னு என்பன இந்நாட்டின் முக்கிய நதிகளாகும்.


டார்டு பல்கலைக்கழகம்

## வரலாறு

13 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் டேனிஸ், ஸ்விடீஸ், ரஷ்யர்கள் என பல்நாட்டு மக்கள் இங்கு குடியேறினர். 1346 இல் டேனியர்கள் எஸ்தோனியாவின் வடபகுதியை ஜேர்மனியின் டியூடோனிக் இளவரசர்களுக்கு விற்றனர். 1526 இல் சுவீடன் இப்பகுதியை தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தது. 1721 இல் ஓர் ஒப்பந்தத்தின்மூலம் ஆட்சி ரஷ்யர்களின் கைக்கு மாறியது. முதலாம் உலக யுத்தகாலத்தில் சுதந்திர நாடாகத் திகழ்ந்தாலும், 1940 இல் சோவியத் ரஷ்யாவின் 16 ஆவது குடியரசாக இணைக்கப்பட்டது.

1990 மார்ச் மாதம் சோவியத் ரஷ்யாவிடமிருந்து எஸ்தோனியா சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டது. அதற்கமைய, 1991 ஆம் ஆண்டு எஸ்தோனியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.2006 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் டூமாஸ் ஹென்றிக் இல்விஸ் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலை அடுத்து அன்ட்ரூஸ் அன்சிப் பிரதமரானார்.



தேசிய இலச்சினை








எஸ்தோனிய நாடாளுமன்றம்

**மொத்தப்பரப்பு:** 16,684 ச.மைல் (43,211ச.கி.மீற்றர்).
**நிலப்பிரிவுகள்:** 15 மாவட்டங்கள்.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** டாலின்.
**ஏனைய பெரிய நகரம்:** டார்ட்டு.
**சனத்தொகை** (2010): 1,291,170.
**உயர் மலைச்சிகரம்:** சூர் முனமாகி - 318 மீற்றர்.
**தாழ்மையம்:** போல்டிக் கடல்.**நாணயம்:** க்ரூன்.


டாலின் துறைமுகம்



## கலாசாரம்

எஸ்தோனிய கலாசாரத்துடன் நோர்டிக் கலாசாரமும் இங்கு சிறப்புற்று விளங்குகின்றது. வரலாற்று ரீதியாகவும் புவியியல் ரீதியாகவும் எஸ்தோனிய நாட்டு கலாசாரத்தில் பின்லாந்து, போல்டிக் ஸ்லேவின் மற்றும் ஜேர்மனிய மக்களின் கலாசாரப் பாதிப்புகள் பெரிதும் நிலவுகின்றன. அத்தோடு,முன்னாள் ஆட்சி அதிகாரம்கொண்ட சுவீடன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் கலாசார தாக்கங்களையும் இங்கு காணலாம்.

## காலநிலை

வட ஐரோப்பிய காலநிலை வலயத்தில் அமைந்திருப்பதால், அப்பிராந்திய காலநிலையை பெரிதும் அனுபவிக்கும் நாடாக எஸ்தோனியா திகழ்கின்றது. நான்கு விதமான மாறுபட்ட பருவகாலநிலைகளைக் கொண்டுள்ளது. பொதுவாக, கோடைகாலம் குளிராகவும் இதமாகவும் இருக்கும். ஜூன் முதல் ஓகஸ்ட் வரை கோடைகாலமாகும். பெப்ரவரி மாதம் மிகக் குளிரான மாதமாகும்.


ஜனாதிபதி


பிரதமர்

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 541,900; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்: 1.659 மில்லியன். **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2001): FM 98. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 3. **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 387,336; இணையத்தளப் பாவனையாளர்கள்: 760,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2006): மொத்தம் 968 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2004): மொத்தம் 56,856 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து** (2003): 500 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** கொப்லி, குய்வாஸ்கு, முங்கா,டாலின், விர்ட்சு.


நார்வா நைட்ஸ் கோட்டை

**விமான நிலையங்கள்** (2007): 19.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 12.05%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** கிழங்கு வகைகள், மரக்கறி வகைகள், கால்நடைகள், பாற்பண்ணைப் பொருட்கள், மீன்.
**கைத்தொழில்கள்:** மரமும் மரத்தளபாடங்களும், புடவைகள், தொலைதொடர்பாடல் உபகரணங்கள். **இயற்கை வளங்கள்:** எண்ணெய், மணல், கடற்களி. **ஏற்றுமதிகள்** (2009): இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும், மரங்கள்,கடதாசிகள்,புடவை வகைகள், உணவு உற்பத்திப்பொருட்கள். தளபாடங்கள். **இறக்குமதிகள்** (2009): ரசாயனப்பொருட்கள், உணவுப் பொருட்கள்,போக்குவரத்துச் சாதனங்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): பின்லாந்து, சுவீடன், ரஷ்யா, ஜேர்மனி, லத்வியா, லித்துவேனியா, ஐக்கிய அமெரிக்கா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- அலெக்செண்டர் நெஸ்கி தேவாலயம்
- ரொக்கா எல் மெயர் திறந்த நூதனசாலை
- நார்வா நைட்ஸ் கோட்டை
- கெட்ரியோக் மாளிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுதந்திரத்தை பெற்றுக்கொடுத்த ஒன்றிணைந்த போராட்டம்....!


## இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினம்

பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் 64 ஆவது சுதந்திர தினம் அனுஷ்டிக்கப் படுகின்றது. இலங்கைக்கு சுதந்திரம் வெறுமனே கிடைத்த தொன்றல்ல. நாட்டின்மீது பற்றுள்ள பல்லாயிரக்கணக்கா னோர்களின் தியாகத்தின் பின்னணியில் விளைந்ததே இந்த சுதந்திரமாகும். சுதந்திரத் திற்காக பல்வேறு இயக்கங்கள் மூலமாக அனைவரும் ஒன்றிணைந்து போராட்டம் நடாத்திய தலைவர்களை இந்நாளில் நினைவுகூருவது சாலப்பொருத்தமாகும். 1505 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட் டினரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்து வந்த எமது சின்னஞ் சிறிய நாட்டை வெளிநாட்டினர் தத்தமது தேவைகருதிப் பயன்படுத்தி வந்தனர். நாட்டின் அபிவிருத்தியில் கவனம் கொள்ளாது, அவர்களது நலனை முன்னிலைப்படுத்தியே குழப்பங்களுக்கு தூபமிட்டு இனங்களுக் கிடையிலான இடைவெளியை அதிகரிப்பதில் அந்நியர்கள் வெற்றியும் கண்டிருந்த காலகட்டம் அது.

இதற்கு அநகாரிக தர்மபால, ஆறுமுக நாவலர், அறிஞர் சித்திலெவ்வை, வாபிச்சி மரைக்கார் போன்றோர் தங்களது சமயரீதியான நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தி, தத்தமது மார்க் கத்தை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் செலுத்தியமை ஆங்கிலேயர்களுக்கு நல்ல பதிலடியாக இருந்தது. ஒன்றுபட்ட இலங்கையினைப் பெறுவதில் சிறுபான் மையினத் தலைவர்களுடன் பெரும்பான் மையினர் நல்லுறவு பூண்டிருந்தனர்.

ஆங்கிலக் கல்வியின் மோகம் காரண மாக, நாட்டுப்பற்றாளர்கள் குறைந்து கொண்டு வருவது தொடர்பான அச்சத் தின் மத்தியில் நாட்டுப்பற்றாளர்களை உருவாக்கும் நோக்குடன், கல்விரீதியான மதசார்பு கொள்கையை தலைவர்கள் கடைப்பிடிக்கத் தொடங்கினர். அந்தவகையில், சமுதாய நலனில் அக்கறைகொண்ட தலைவர்களாக ஹென்றி ஸ்டீல் ஒல்கொட், அநாகரிக தர்மபால, குணாநந்த தேரர், ஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர் பொன்னம்பலம் இராமநாதன், அறிஞர் சித்திலெவ்பை, கொடைவள்ளல் வாப்பிச்சி மரைக்கார், அப்துர் றகுமான், ஓராபிபாஷா, அப்துல் அஸீஸ் போன்றோர் கல்வி ரீதியான மறுமலர்ச்சிக்குரிய வழிவகைகளை ஏற்படுத்தி அதன்பக்கம் தான் சார்ந்த சமுதாயத்திற்கு உதவினர்.

தேசிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதன் பிற்பாடு, சமயரீதியான விழிப்புணர்வுகள் மேம்படலாயின. பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயரீதி யான மறுமலர்ச்சிக்கு மத்தியதர வர்க்கத்தி னரின் கல்வியும் செல்வமும் பக்க பல மாக அமைந்திருந் தன. இக்கால கட்டங் களில் பத்திரிகைகள் ஊடாக, நாட்டின் விடுதலைக்கு வித்தி டவும் காரணியாக அமைந்திருந்தன.


இலங்கையின் சுதந்திரக் கொடி ஏற்றப்படுகின்றது

அந்தவகையில், 1864 இல் லக்மினி கிரண, பஹண, அருனோதய, 1866 இல் ஞானார்த்த பிரதீபய, 1880 இல் சரசவி சந்தேஷய, 1902 இல் சிங்கள ஜாதிய, 1888 இல் இந்து சாதனம், 1909 இல் தினமின, 1930 இல் வீரகேசரி, 1931 இல் தினகரன், அறிஞர் சித்திலெவ்பையின் முஸ்லிம் நேசன், ஞானதீபம் போன்ற பத்திரிகைகள் வெளியாகி தேசிய விடுதலைக்கு வழிவிடக் கோரிநின்றன.

தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தினரால் கலாசார மறுமலர்ச்சிக்கும் அப்பால் அரசியல் சீர்திருத்தங்களுக் கான போராட்டங் களும் கைக்கொள் ளத் தொடங்கின. தேசிய மது ஒழிப்பு இயக்கத்தின் ஊடாக, தேசிய விடுதலைக்கு வித்திட்டார். இவரது நாட்டுப்பற்றின் விளைவு, தேச விடுதலையின் ஒரு வடிவமாக பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவருமாகத் திகழ்கின்றார்.

பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் அரசியல் பின்னணியில் பல முஸ்லிம் தலைவர்கள் சுதந்திரத்திற்கான போராட்டங்களில் கலந்திருந்தனர். கல்வியின் மூலமாக, சமுதாயம் உயர்வடைவதன் அவசியத்தை பல முஸ்லிம் தலைவர்களுடன் இணைந்து சட்டசபையிலும் வெளியிலும் கலாநிதி ரீ.பி.ஜாயா அவர்கள் செயற்திறன் மிகுந்த பங்களிப்பை நல்கினார். 1914 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'சிலோன் ரிவீவ்' எனும் சஞ்சிகை வாயிலாக, எழுதிய கடிதம் முஸ்லிம்களின் கல்விக்கு அவர்கொடுத்த ஒத்தடமாகவே கருதப்படுகின்றது. கொழும்பு சாஹிராவின் அதிபராக இருந்து அவர் சமுதாயத்திற்கு சேவைகள் பல செய்திருந்தார்.


சேர்.பொன்னம்பலம் ராமநாதன்


அநாகரிக தர்மபால


டீ.எஸ்.சேனநாயக்க


சித்திலெப்பை



குணாநந்த தேரோ


அப்துர் ரஹ்மான்


பொன்னம்பலம் அருணாச்சலம்

ஒவ்வொரு திட்டத்தையும் ஆரம் பித்திருந்தனர். ஆனால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உள்நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந் தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் சுதந்திரத்தை அடைவதில், தாய் நாட்டுக்காகப் போராடும் வகை யில் இந்நாட்டு மக்கள் அனைவ ரும் இன, மத பேதமற்ற முறை யில் ஒற்றுமையாய் தங்களது எதிர்ப்பைக் காட்டியமையினால் 1948 பெப்ரவரி 4 ஆம் திகதி ஆங்கிலேயர்களால் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப் பட்டது. வளம் கொழித்த நாட்டை சீரழித்து வெறுமையு டன் ஒப்புவித்திருந்தது மட்டு மின்றி, பிரித்தாளும் தந்திரத் தின் பயனாக சமயரீதியான


சுதந்திர இலங்கையின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர்கள்

தலைவர்களான டீ.எஸ்.சேனநாயக்க, எப்.ஆர்.சேனநாயக்க, அநாகரிக தர்மபால, எட்மன் ஹேவாவிதாரண, சேர் டீ.பி.ஜயதிலக, டபிள்யூ ஏ.சில்வா, பியதாஸ, சிரசேன, ஆர்தர் வி.தியெஸ் போன்றோர் மதுபாவனைக்கு எதிராக தமது போராட்ட வடிவத்தை முன்கொண்டு சென்றனர். பிரித்தானிய ஆட்சியாளர்கள் கதிகலங்கும் அளவுக்கு இவ்வியக்கத் தலைவர்கள் போராட்டத்தின் ஊடாக, தேசிய தலைவர்களாக மாற்றம் பெற்றுகொள்ளவும், பின்னர் தேச விடுதலைக்கும் வெளிப்படையான ஆதரவையும் நல்கினர்.

1919 ஆம் ஆண்டில் இலங்கைத் தேசிய சங்கத்தை ஆரம்பித்திருந்த திருவாளர் பொன்னம்பலம் அருணாச்சலம் வீரப் பெருந்தகைப் பட்டத்தையும் பெற்று தேசிய

சுதந்திரப் போராட்டத்தின் விளைவாக, அரசியல் சீர்திருத்தங்கள் பல உருவாக்கப்படலாயின. 1921 இல் மனிங் யாப்பு சீர்திருத்தம், 1931 இல் டொனமூர் சீர்திருத்தம் ஆகியன குறிப்பிடத்தக்கது. இதன் விளைவாக சர்வஜன வாக்களிப்பு உரிமை கிடைத்தது. தொடர்ந்து சோல்பரி பிரபு அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட 'சோல்பரி யாப்பு 1948 இல் உருவாக்கப்பட்டு நாட்டின் சுதந்திரத்திற்கான கதவு திறக்கப்படலானது. 1948 ஆகஸ்டில் நடைபெற்ற தேர்தலின் பிரகாரம் முதலாவது பிரதமராக கௌரவ டீ.எஸ்.சேனநாயக்க அவர்களும், ஆளுநராக சேர் ஒலிவர் குணதிலகவும் சுதந்திர இலங்கையில் தெரிவு செய்யப்பட்டனர்.

எஸ்.எல்.மன்சூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் - II

பெயர்: ........................................................ நேரம்: 1 மணித்தியாலம்

01) பின்வரும் பந்தியை வாசிக்க

**உலகப் புத்தக தினம் - ஏப்ரல் 23**

ஐக்கிய நாடுகள் சபை ஏப்ரல் 23 ஆம் திகதியை உலக புத்தக தினமாக அறிவித் துள்ளது. நமக்குத் தேவையானவற்றில் முக்கியமானதொன்று புத்தகமாகும். நல்ல நூல்களே உற்ற நண்பர்கள். மற்றைய உயிரினங்களின் வாழ்க்கையில் தலைமுறைகள் மாறினாலும், வாழ்க்கை முறைகள் மாறாமல் தொடங்கிய இடத்திலிருந்தே மீண்டும் மீண்டும் தொடங்குகிறது. ஆனால், மனிதனின் வாழ்க்கை மட்டும்தான் ஒரு தலைமுறை விட்ட இடத்திலிருந்து அடுத்த தலைமுறை வாழ்க்கையைத் தொடங்குகிறது. மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வரலாறாக நூல்களில் பதிவுசெய்வதன் காரணத்தால்தான் அது சாத்தியமாகின்றது.

★ *இப்பந்தியைப் பயன்படுத்தி 1 தொடக்கம் 6 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.*

1. உலக புத்தக தினத்தை பிரகடனப்படுத்திய நிறுவனம் எது? ..................
2. 'புத்தகங்கள்' என்பதன் ஒத்தசொல் தருக..................
3. இங்குள்ள உயர்திணைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று தருக. ..................
4. நல்ல நூல்கள் எதற்குச் சமனானவை என்று கூறப்படுகின்றது? ..................
5. இங்கு குறிப்பிட்ட அடுக்குமொழிச் சொல் ஒன்று தருக..................
6. பந்தியில் குறிப்பிட்ட பெயர் அடைமொழி ஒன்று தருக. ..................

02) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை தெரிவுசெய்து, புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் .................. வது உடம்புக்கு நல்லது. (உழவு, உளவு, உலவு)
2. "தந்தை தாய்.................." என்பது நாம் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு முதுமொழியாகும். (பேண், பேன்)

03) சரியான விடையைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. பூவிலிருந்து மணம் கமகம என்று வீசியது. 'கமகம' என்பது.................. (இணைமொழி, இரட்டைக்கிளவி, அடைமொழி)
2. ஏழை எளியவர்களுக்கு உதவுவது ஓர் உத்தம குணமாகும். இங்கு 'ஏழை எளியவர்' என்பது..................(மரபுத்தொடர், இணைமொழி, உவமைத்தொடர்)
3. பாலைப் போல நிலவு வானில் பவனி வருகிறது. 'பாலைப்போல' என்பது.................. (மரபுத்தொடர், அடைமொழி, உவமைத்தொடர்)
4. நாய் விரைவாய் ஓடியது. 'விரைவாய்' என்பது.................. (செயற்படுபொருள் அடைமொழி, பயனிலை அடைமொழி, எழுவாய் அடைமொழி)

04) தங்கம், கம்பம், காகம், கட்டம் என்ற சொற்களில் "க" என்னும் எழுத்தில் காணப்படும் இயல்பொலி சொற்களை எழுதுக.

1. .................. 2. ..................

05) நூதனசாலை, சூரியன் என்ற இரு சொற்களிலும் நூ, சூ என்னும் எழுத்துக்களில் இடப்பட்டுள்ள உயிர்க் குறிகளின் பெயர்களை அடைப்புகளிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1. ' நூ ' (கீழ்க்காலும் சுழியும் - மடக்கேறு, மடக்கேறும் அரவும்)..................
2. சூ (மடக்கேறு- கீழ்க்கால், கீழ்க்காலும் சுழியும்)..................

06) சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

(1) 1. கலை நிகள்ச்சிகள் 2. களை நிகழ்ச்சிகள் 3. கலை நிகழ்ச்சிகள் 4. களை நிகச்சிகள்

(2) 1. இணையத்தளம் 2. இணையத்தலம் 3. இணையத்தழம் 4. இணையதளம்

07) பின்வரும் ஒவ்வொரு மரபுத்தொடரினதும் கருத்தை எழுதுக.

1. வயிற்றெரிச்சல் - ..................
2. முகம் மலர்தல் - ..................

08) பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை - ..................
2. ஐம்பதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா - ..................

09) ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

1. கதிரை - ..................
2. வகுப்புத் தலைவர் - ..................
3. நூலகம் - ..................

10) பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

1. Thank you - ..................
2. What is it? - ..................
3. May I come in? - ..................

11) பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

1. ஒ(B)பே கம கொஹே(Dh)த?..................
2. மட தோசே தென்ன ..................

★ *12 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

12) பங்குனி மாதத்தில் பூக்கும் தாவரம் எது?

1. ரம்புட்டான் 2. றப்பர் 3. முள்முருக்கு 4. இலுப்பை

13)  இவ்வுருவில் உள்ள பூ எது?

1. அகத்திப் பூ 2. நீல அல்லி 3. கடதாசிப் பூ 4. கார்த்திகைப் பூ

14) ஔடத பானங்கள் தயாரிக்கப் பயன்படும் பூ எது?

1. கடதாசிப் பூ 2. எக்சோரா 3. பொன்னாவரைப் பூ 4. தாமரைப் பூ

15) வருடத்தின் அனைத்துக் காலப்பகுதியிலும் பூக்கும் பூ எது?

1. இலுப்பைப் பூ 2. கார்த்திகைப் பூ 3. தாழம் பூ 4. லில்லிப் பூ

16)  இவ்வுருவில் உள்ள பூச்சி எது?

1. வண்ணத்துப் பூச்சி 2. அந்துப் பூச்சி 3. கும்பிடு பூச்சி 4. பச்சிலைப் பூச்சி

17) கூர்மையான கேட்டல் திறன்கொண்ட பிராணி எது?

1. கழுகு 2. புலி 3. நாய் 4. பருந்து

18) மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு வகை எது?

1. கியூலெக்ஸ் 2. ஈடிஸ் இன பெண் நுளம்பு 3. அனோபிலிஸ் பெண் நுளம்பு 4. அனோபிலிஸ் ஆண் நுளம்பு

19) மழை நேரங்களில் மழையில் நனைய விரும்பும் பிராணி எது?

1. எருமை 2. சிங்கம் 3. ஆடு 4. முயல்

20) மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் முதலில் செய்ய வேண்டிய செயற்பாடு எது?

1. மனதைத் தளர்த்துதல் 2. உடலைத் தளர்த்துதல் 3. மனவுறுதி 4. பிரார்த்தனை

21) பின்வரும் முகங்களில் சோகமான முகபாவனையைக் காட்டும் முகம் எது?

1.  2.  3.  4. 

22) சிறுவர்களுக்கு உடல் ரீதியாகவோ, உள ரீதியாகவோ துன்பம் விளைவிப்போர் பற்றி அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் எது?

1. 1231 2. 1929 3. 1919 4. 119

23) மயக்கமுற்ற நோயாளிக்கு மிகப் பொருத்தமான முதலுதவியாக அமைவது எது?

1. ஆடைகளை தளர்த்திக் காற்றுப்பட விசிறுதல்.
2. தலையை நன்கு கீழ்நோக்கித் திருப்பிக் காற்றுப்படச் செய்தல்.
3. சிறிதளவு நீரைத் தெளித்தலும் அருந்துவதற்குக் கொடுத்தலும்.
4. தலை நிமிர்ந்திருக்குமாறு அமரச் செய்து காற்றுப்பட விசிறுதல்.

24) இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் மூன்று பகுதிகளும் எவை?

1. தர்ம சக்கரம், நெற்கதிர், அரச இலைகள்
2. அரச இலைகள், பூவிதழ்கள், நெற்கதிர்
3. தர்ம சக்கரம், நெற்கதிர், வாளேந்திய சிங்கம்
4. நெற்கதிர், சங்கு, தர்ம சக்கரம்

25) உடலுக்குத் தேவையான சக்தியை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்தும் உணவுச் சோடி எது?

1. வாழைப்பழம், நெத்தலிக்கருவாடு 2. மாஜரின், நெய் 3. கோவா, கரட் 4. தீட்டாத அரிசி, விளாம்பழம்

26) தேசப்படங்களில் பாலத்தைக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் எது?

1. சிவப்பு 2. நீலம் 3. கறுப்பு 4. கபிலம்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளிப் பயணத்தின் வரலாற்றுப் பதிவுகள் சில...

## 1968 டிசம்பர் சந்திரனின் சுற்றுப்பாதையில் 'அப்பலோ 8'

வில்லியம் அண்டர்ஸ், ஃப்ரேங் போமன் மற்றும் ஜேம்ஸ் லொவெல் ஆகிய மூன்று விண்வெளி வீரர்களும் 'அப்பலோ 8' விண்கலத்தின்மூலம் புவிச் சுற்றுப்பாதையைக் கடந்து சந்திரனின் சுற்றுப்பாதையில் முதன்முதலாக பிரவேசித்தனர். இவர்கள் 1968 ஆம் ஆண்டு நத்தார் தினத்திற்கு முதல்நாள் சந்திரனின் சுற்றுப்பாதையில் இருந்து நேரடியாக புகைப்படங்களைப் பூமிக்கு அனுப்பினர். இந்நிகழ்வு இடம்பெறுவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் கென்னடி விண்வெளி மத்தியநிலையத்திலிருந்து புறப்பட ஆயத்தமாயிருந்த ரொக்கெட் வெடித்துச் சிதறிய சம்பவத்தில், உயிர்நீத்த விண்வெளி வீரர்கள் மூவரையும் நினைவுகூர இவர்கள் அப்போது மறக்கவில்லை.

## 1975 ஜூலை 17 இரு நாடுகளினதும் ஒன்றிணைவு



15 வருடங்களுக்கும் மேலாகப் போட்டி போட்டு விண்வெளிப் பயணங்களை மேற்கொண்ட ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் ஒன்றிணைந்து விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ளத் தீர்மானித்தன. அதன்படி, 1975 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி ரஷ்யாவின் சோயுஸ் விண்கலமும் அமெரிக்காவின் அப்பலோ விண்கலமும் விண்வெளியில் ஒன்றோடொன்று தொடர்புகொண்டன. ரஷ்ய விண்வெளி வீரரான எலெக்ஸி லியனோவ்வும் அமெரிக்க விண்வெளி வீரரான தோமஸ் ஸ்டெஃபர்ட்டும் சுரங்கக் குழாய் ஒன்றின்மூலம் மிதந்து வந்து ஒருவருக்கொருவர் கைகுலுக்கி வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

## 1969 ஜூலை 16 அப்பலோ 11 சந்திரனுக்குச் சென்றது



1969 ஜூலை 16 ஆம் திகதி அமெரிக்காவின் நாஸா நிறுவனத்தின் வர்னர் வொன் பவுன் தயாரித்த 'செட்டர்ன் 5' ரொக்கெட்டானது, மூன்று விண்வெளி வீரர்களை சுமந்துகொண்டு விண்வெளிக்குச் சென்றது. சந்திரனை நோக்கிய இந்தப் பயணத்தில் நீல் ஆம்ஸ்ட்ரோங்,எட்வின் ஒல்ட்ரின், மைக்கல் கொலின்ஸ் ஆகிய மூவருமே கலந்துகொண்டனர். 'அப்பலோ 11' விண்வெளித் திட்டத்திற்கிணங்கவே, இப்பயணம் ஆரம்பிக்கப்பட்டது. பயணம் ஆரம்பித்து மூன்றாவது நாளில் விண்வெளி வீரர்கள் மூவரும் சந்திரனின் சுற்றுப்பாதைக்குள் பிரவேசித்தனர். ஜூலை 20 ஆம் திகதி கொலம்பியா விண்கலத்தில் சந்திரனின் சுற்றுப்பாதையில் மைக்கல் கொலின்ஸ் தங்கியிருக்க, ஈகல் விண்கலத்தில் ஏறி நீல் ஆம்ஸ்ட்ரோங்கும் எட்வின் ஒல்ட்ரினும் சந்திரனில் தரை இறங்கினர். அதன்படி, சந்திரனில் முதலில் காலடி வைத்தவராக நீல் ஆம்ஸ்ட்ரோங் கருதப்படுகிறார்.

## 1979 டிச: 24 'ஏரியேன்' விண்வெளிப் பயணம்



ஏரியேன் ரொக்கெட்டை வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பியதோடு, ஐரோப்பா தனது விண்வெளிப் பயண நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

## 1986 ஜன: 28 செலெஞ்சர் விண்கலத்தின் விபத்து



அமெரிக்காவின் விண்வெளிப் பயண வரலாற்றில் பாரதூரமான விபத்தாக 1967 ஆம் ஆண்டு நிகழ்ந்த அப்பலோ 1 ரொக்கெட் விபத்தைக் குறிப்பிடலாம். இந்த விபத்தில் விண்வெளி வீரர்கள் மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. இதனை அடுத்து, 1986 ஜனவரி 28 இல் அமெரிக்காவின் விண்வெளித்துறையானது, மற்றொரு துரதிர்ஷ்ட நிகழ்வொன்றுக்கு முகம் கொடுத்தது. அதுதான் செலெஞ்சர் விண்கல விபத்து. செலெஞ்சர் விண்கலமானது, மேல் நோக்கி ஏறும்போது வெடித்துச் சிதறியது. பயணத்தை ஆரம்பித்து 73 விநாடியில் நிகழ்ந்த இந்த விபத்தில் நாஸா நிறுவனத்தின் ஆறு விண்வெளி வீரர்கள் உட்பட, பாடசாலை ஆசிரியையாகிய உத்தியோகபூர்வமற்ற விண்வெளி வீராங்கனையான கிறிஸ்டா மெக் ஒலிஃப் என்பவரும் உயிரிழந்தார். ரொக்கெட் பூஸ்டர்களில் ஏற்பட்ட கோளாறின் காரணமாகவே இந்த விபத்து நடந்தது.

## 1971 ஏப்: 19 'செலியுட் 1'



சோவியத் ரஷ்யா 'செலியுட் 1' என்ற பெயரில் விண்வெளி நிலையம் ஒன்றை புவிச் சுற்றுப்பாதையில் நிறுவியது. 'ப்ரோட்டோன் கே' எனும் ஆளில்லா ரொக்கெட்டின் உதவியுடனேயே இது நிறுவப்பட்டது.

## 1981 ஏப்: 12 விண்கலத்தின் முதல் பயணம்

அமெரிக்கா விண்வெளிப் பயணங்களில் புதிய புரட்சி ஒன்றை ஏற்படுத்தியது. தொடர்ச்சியாக விண்வெளிப் பயணங்களை மேற்கொள்ளும் பொருட்டு, ரொக்கெட் ஒன்றின் உதவியுடன் முதன்முதலில் விண்கலம் ஒன்றை விண்வெளிக்கு அனுப்பியது. அந்த வகையில், விண்வெளிக்குச் சென்ற முதலாவது விண்கலம் 'கொலம்பியா' ஆகும்.விண்வெளியிலிருந்து மீண்டும் புவிக்குத் திரும்பும்போது, விமானத்திற்கு நிகரான முறையில் தரை இறங்கும் தொழில்நுட்பம் விண்கலத்தில் பயன்படுத்தப்பட்டது. விண்வெளிப் பயணத்தில் நீண்ட காலத்திட்டத்திற்கு காலடி வைக்கும் முகமாகவே, இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மனித குல வரலாற்றில் முதலாவது விண்வெளிப் பயணமாகக் கருதப்படும் யூரி ககாரினின் விண்வெளிப் பயணத்தின் 20 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டே, இந்த விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து 27 வெற்றிகரமான பயணங்களை கொலம்பியா விண்கலம் மேற்கொண்டுள்ளது.

## 1971 ஜூன் 07 'சோயுஸ் 11' விபத்து




சோவியத் ரஷ்யாவின் 'சோயுஸ் 11' விண்வெளி மொடியூலானது, மூன்று விண்வெளி வீரர்களுடன் விண்வெளிக்குச் சென்று திரும்புகையில் விபத்துக்குள்ளானது. இதில் பயணித்த மூன்று விண்வெளி வீரர்களும் உயிரிழந்தனர்.

## 1975 மே ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையம்

18 ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையமொன்றை 1975 ஆம் ஆண்டு நிறுவின. இதன் தலைமையகம் பிரான்ஸ் நாட்டின் தலைநகராகிய பெரிஸ் நகரில் அமைந்துள்ளது.

# சுதந்திரப் போராட்டத்தில் தோள்கொடுத்த வீரர்கள்

இலங்கையின் சுதந்திரத்திற்கெனப் போராடியவர்கள், உழைத்தவர்கள் பலர். அவர்கள் இனம், மொழி, மதம், கலாசாரம், அரசியல் என ஒவ்வொரு பிரிவிலும் அங்கத்துவம் வகித்தவர்களாக இருந்தனர். பிரித்தானியர்களின் ஆளுகைக்குள் இலங்கை இருந்த காலகட்டம் தொடக்கம் இலங்கையின் வரலாற்றுப் பாதையில் இவர்கள் தமது மகத்தான பங்களிப்பினை வழங்கினர். அவ்வாறே, சுதந்திரப் போராட்டத்திற்கு பல்வேறு வகைகளில் தோள் கொடுத்தனர். அவர்களைக் கௌரவிக்குமுகமாக, அந்த வீரர்களை சித்தரிக்கும் குழுவாக வரையப் பட்ட ஓவியமொன்று இவ்வார விஜய்யின் நடுப்பக்கத்தில் பிரசுரிக் கப்பட்டுள்ளது. அவர்களின் பெயர்கள் வருமாறு:

01. ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கல தேரர்
02. ரத்மலானே ஸ்ரீ தர்மராம தேரர்
03. வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர்
04. வெலிவிட்ட அசரண சரண சரணங்கர சங்கராஜ தேரர்
05. வெலிவிட்டயே ஸ்ரீ சோரத்த தேரர்
06. திபெத்தியரான எஸ். மஹிந்த தேரர்
07. பொஹோட்டவத்தே குணானந்த தேரர்
08. அம்பகஹவத்தே இந்திரசார ஞானவிமல தேரர்
09. கொங்காலெகொட பண்டா
10. வீரபுரன் அப்பு
11. மொனரவில கெப்பெட்டிபொல
12. ஸ்ரீ ஆறுமுகநாவலர்
13. பியதாச சிறிசேன
14. மார்ட்டின் விக்கிரமசிங்க
15. குமாரதுங்க முனிதாச
16. ஆனந்த சமரக்கோன்
17. வலிமுனி சோலியஸ் மெண்டிஸ்
18. சட்டத்தரணி ஜோன் டி சில்வா
19. ஆனந்த குமாரசாமி
20. பேராசிரியர் சௌரத் பரணவிதான
21. சேர். போல் ஈ. பீரிஸ் தெரணியகல
22. ஹென்ரி ஸ்டில் ஒல்கட்
23. அநகாரிக தர்மபால
24. பொன்னம்பலம் அருணாச்சலம்
25. சேர். பொன்னம்பலம் இராமநாதன்
26. எச். டபிள்யூ.அமரசூரிய
27. கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர
28. டி.ஆர். விஜேவர்தன
29. பிரம்மச்சாரி வலிசிங்ஹ ஹரிச்சந்திர
30. மாரி மியுசியஸ் ஹிகின்ஸ்
31. கலாநிதி ரிச்சர்ட் லெஸ்லி புரொனியர்
32. எஸ்.ஜி.பெரேரா குருவானவர்
33. பேராசிரியர் குணபால மலலசேகர
34. டொக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்ஹ
35. பண்டித் ஜீ.பீ. விக்ரமாரச்சி
36. அறிஞர் சித்தி லெப்பை மொஹமட் காசிம்
37. கலாநிதி டி.பி. ஜாயா
38. எட்வர்ட் ஹென்ரி பேதிரிஸ்
39. எஃப். ஆர். சேனாநாயக்க
40. சட்டத்தரணி ஈ. டபிள்யூ. பெரேரா
41. கலாநிதி என்.எம். பெரேரா
42. ஜே.ஆர். ஜயவர்தன
43. சேர். டி. பி. ஜயதிலக்க
44. டி. எஸ். சேனாநாயக்க
45. பிலிப் குணவர்தன
46. எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க
47. ஜேம்ஸ் டி அல்விஸ்
48. ஹங்குரங்கெத்த டிங்கிரால
49. பூட்டேவே ரட்டே ரால

(12 ஆம், 13 ஆம் பக்கங்களைப் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரப் போராட்டத்தில் தே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோள்கொடுத்த வீரர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு நண்பர்கள்



ஆள் நடமாட்டமில்லாத ஒரு பாதையில் அந்தக் கழுதை மிகுந்த வருத்தத்துடன் சென்றுகொண்டிருந்தது. இந்த மனிதர்கள் இவ்வளவு நன்றி கெட்டவர்களாக இருப்பார்கள்! என்று அது துளிகூட நினைக்கவே இல்லை. வயதாகி விட்டதால் கழுதையின் எஜமானாகிய சலவைத் தொழிலாளி அதை விரட்டிவிட்டான். இனி எங்கே போய் உணவு தேடுவது? என்ற விரக்தியில் காட்டை நோக்கி அது சென்றுகொண்டிருந்தது.

சற்றுத் தூரத்தில் ஒரு வேட்டை நாய் தள்ளாடியபடியே மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தது. அருகில் வந்த பின்னர்தான் அதுவும் தன்னைப் போலவே வயதான வேட்டை நாய் என்று கழுதை தெரிந்துகொண்டது. கழுதையின் அருகில் வந்த அந்த நாய் "என்ன கழுதை அண்ணா உன் எஜமானரை விட்டு விட்டு இப்படித் தனியே வருகிறாய்?" என்று கேட்டது. அதற்கு கழுதை தனது கதையைச் சொல்லி கண்ணீர் மல்கி நின்றது. "ஆமாம் உன்னை மாதிரியே என் எஜமானர்கூட, எனக்கு வயதாகிவிட்டதென்று என்னையும் துரத்தி விட்டார்" என்று கூறி அழுதது வேட்டை நாய். "ஐயோ அப்படியா? சரி நீயும் என்னுடன் வா. நாம் இருவருமாகக் காட்டுக்குப் போவோம். கிடைக்கும் உணவைப் பகிர்ந்துண்டு எஞ்சிய நாட்களை நாம் கழிக்கலாம்" என்றது கழுதை.

இரண்டும் மெதுவாகக் காட்டை நோக்கி நடக்கத் தொடங்கின. வழியில் அவை ஒரு பூனையைச் சந்தித்தன. பூனை தனக்கு வயதாகி விட்டதால் எலி பிடிக்கத் தகுதி அற்றவன் எனக் கருதி தன்னை வீட்டில் இருந்து எஜமான் விரட்டி விட்டதாகக் கூறியது. இதனால், மூன்று விலங்குகளும் சேர்ந்து நடக்கத் தொடங்கின. அப்போது அவற்றுக்கு எதிரில் ஒரு சேவல் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி வந்தது. கழுதை அதை நிறுத்தி விபரம் கேட்டது. "ஐயோ இத்தனை நாள் என்னைப் பாசமாக வளர்த்த எனது வீட்டுக்காரர்கள் இப்போது திடீரென்று என்னைக் கொன்று விருந்தாளிக்கு விருந்து வைக்கத் திட்டம் போட்டுவிட்டார்கள். அதைக் கேட்ட நான் அவர்களுக்குத் தெரியாமல் தப்பித்து ஓடி வருகிறேன்" என்று கூறி மூச்சு வாங்கியது. பின்னர் நான்கும் சேர்ந்து அந்த அடர்ந்த காட்டை நோக்கி நடந்தன. நன்றாக இருட்டிவிட்டதால். சற்றுத் தூரத்தில் ஒரு வெளிச்சம் தெரிந்தது. உடனே அவை அதன் அருகில் சென்று பார்க்க முடிவெடுத்தன.

அங்கு ஒரு சிறிய வீடு காணப்பட்டது. சற்று உயரத்தில் ஜன்னல் ஒன்றும் இருந்தது. கோழி மெதுவாகப் பறந்து மேலே ஏறிப் பார்த்து விட்டு இறங்கியது. "உள்ளே சில திருடர்கள் சிலர் பணத்தை எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்றது. அப்படியா? அவர்களைத் துரத்தி விட்டால் நாம் இந்த வீட்டிலேயே இருந்துகொள்ளலாம் என்றது பூனை. உடனே அவை நான்கும் அந்தத் திருடர்களை விரட்டத் திட்டம் போட்டன. முதலில் நாய் பலமாகக் குரைத்துக்கொண்டே முகப்புக் கதவை நோக்கி ஓடியது. நாயின் குரைப்புச் சத்தத்தைக் கேட்ட திருடர்கள், 'காட்டுக்குள் எப்படி நாய் குரைக்கிறது? வேறு யாரோ இங்கு வருகின்றார்கள் போலும்!' என்று பரபரப்புடன் பேசிக்கொண்டார்கள்.

அப்போது கழுதை அங்குள்ள கதவைத் தடதடவென்று கால்களால் உதைத்தது. ஐயோ நிஜமாகவே ஆட்கள் வந்துவிட்டார்கள் என்று அலறினார்கள் திருடர்கள். கொள்ளையடித்த பொருட்களைப் போட்டுவிட்டு, பின்வாசல் வழியாகத் தலைதெறிக்க ஓடினர். சற்றுத் தூரம் வரை அவர்களைத் துரத்திச் சென்ற நாய் பின் திரும்பி வந்தது. வீட்டுக்குள் இருந்த உணவு வகைகளை அவை நான்கும் பகிர்ந்துகொண்டன. அந்த வீட்டிலேயே அவை ஒற்றுமையாக இருந்து எஞ்சிய நாட்களை மிக மகிழ்ச்சியுடன் கழித்தன.

இ.சிவறஞ்சினி,
யா/மானிப்பாய் ம.க[illegible]
மானிப்[illegible].

# சுருக்கக் குறியீடுகளின் தமிழ் விளக்கம்




| | | |
|---|---|---|
| 01. UNO | - | ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம். |
| 02. NASA | - | தேசிய விண்கல, விண்வெளித்துறை நிறுவனம். |
| 03. UNEF | - | ஐக்கிய நாடுகள் அவசரகாலப்படை. |
| 04. IBRD | - | புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி. (உலகவங்கி) |
| 05. OPEC | - | பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கான நிறுவனம். |
| 06. MBBS | - | மருத்துவமானி. |
| 07. ADB' | - | ஆசிய அபிவிருத்தி வங்கி. |
| 08. EEC | - | ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம். |
| 09. BBC | - | பிரித்தானிய ஒலிபரப்பு நிறுவனம். |
| 10. BA | - | கலைமானி. |
| 11. B.ed | - | கல்விமானி. |
| 12. Bcom | - | வர்த்தகமானி. |
| 13. DSC | - | விஞ்ஞானக் கலாநிதி. |
| 14. ITU | - | சர்வதேச தந்தி நிறுவனம். |
| 15. CEB | - | இலங்கை மின்சார சபை. |

சா.பியோகிறே,
நுவரெலியா.

# காசியப்ப மன்னன் அமைத்த சீகிரியா

காசியப்பனால் அமைக்கப்பட்ட சீகிரியாக் குன்று அநுராதபுரத்திலிருந்து தெற்கில் கடல் மட்டத்திலிருந்து 180 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. சீகிரிய குன்றின் உச்சியைச் சென்றடையும் பொருட்டு, சிங்கத்தின் வாய் வடிவில் உருவாக்கப்பட்டிருந்த படிக்கட்டுக்கு ஊடாகப் பாதை அமைக்கப்பட்டிருந்தது. இதனால், 'சிங்ககிரி' என இது அழைக்கப்பட்டது.



பின்னர் இது 'சீகிரியா' என பெயர் மாற்றம் பெற்றது. தனது சகோதரனாகிய முகலன் மீண்டும் படை எடுத்து வருவான் என்று அஞ்சிய காசியப்பன் தனது ராச்சியத்தை இத்தகைய ஒரு குன்றுக்கு மாற்றி அதன் உச்சியில் தனது அரச மாளிகையை அமைத்ததாகவும் கூறப்படுகின்றது. அக்கால மன்னர்களுக்கு மக்கள் தெய்வாம்சத்தை வழங்கியமையால் அதனை நிரூபிப்பதற்கே இத்தகைய ஓர் இடத்தை காசியப்பன் தெரிவுசெய்திருக்கலாம் என்ற கருத்தும் உண்டு.

காசியப்ப மன்னன் கலைகள் மீது ஈடுபாடு கொண்டிருந்த ஒரு மன்னனாக இருந்து வந்துள்ளான் என்பது இங்கு வரைந்துள்ள ஓவியங்களூடாகத் தெரிய வருகின்றது. சீகிரியக் குன்றில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்கள் பெருமளவு இந்தியாவின் அஜந்தாக் குகை ஓவியங்களை ஒத்தவையாகவே இருக்கின்றன. சீகிரியக் குன்றின் உச்சியில் சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பிரதேசத்தில் மாளிகை, பொய்கை, ஏனைய கட்டடங்கள் என்பவற்றின் இடிபாடுகளைக் காணமுடியும். குன்றின் அடிவாரத்திலும் கட்டடத் தொகுதி ஒன்றின் இடிபாடுகள் உள்ளன. நீராடும் பொய்கைகள், நீர் விளையாட்டுக்களுக்கான பூங்காக்கள் என்பனவற்றின் அடையாளங்களும் தென்படுகின்றன. ஆசியாவின் மிக முக்கியமான தொல்பொருள் மதிப்பினைக் கொண்டிருக்[illegible] இடங்களில் ஒன்றான சீகிரியா ஓர் அரச வாசஸ்தலமாகவும் அலங்காரப் பூங்காவாகவும் அக்காலத்தில் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளது என்பதற்கான சான்றுகள் உள்ளன.



ஏ.கலைக்காந்தன்,
கொ/ முகத்துவாரம் இந்துக் கல்.,
கொழும்பு-15



# ஆசானைப் போற்றிடுவோம்!

கல்வி எனும் மூன்றெழுத்தைக்
கவனமுடன் நாம் பயின்று
அறிஞர்களாய் நாம் வாழ வித்திட்ட
ஆசானைத் தினம் போற்றிடுவோம்!


பல்கலையும் பயின்றிடப்
பண்புடனே பயிற்றுவித்து
அன்புடனே அறிவை ஊட்டிய
ஆசானை நாளும் போற்றிடுவோம்!

மாணவரெம்மை மா மனிதர்களாக்கி
மாநிலம் போற்றும் நல் மனிதராய்
அன்புடன் வாழ வழியமைத்த -எம்
ஆசானை என்றும் வணங்கி நிற்போம்!

லோ.தட்சாயினி

# இலங்கையின் பிரதான மலைகள்

| மலைகள் | உயரம் |
|---|---|
| 01. பீதுருதாலகலை | 2,524.69மீற்றர் |
| 02. கிறகல் பொத்த | 2,395.42மீற்றர் |
| 03. கொலபத்தன ஹெல | 2,364.02மீற்றர் |
| 04. தொட்டுபொல | 2,360.06 மீற்றர் |
| 05. குடாகலை | 2,320.12மீற்றர் |
| 06. பல்ப் | 2,306.70மீற்றர் |
| 07. கிக்கிலிமான | 2,246.64மீற்றர் |
| 08. சமனல | 2,243.90மீற்றர் |
| 09. ஹொகஸ்பேக் | 2,216.16மீற்றர் |
| 10. கிறேட் வெஸ்டர்ன் | 2,216.15மீற்றர் |
| 11. கோனமல்ல கந்த | 2,214.32மீற்றர் |
| 12. மவுண்ட் பார் | 2,208.53மீற்றர் |
| 13. ஹக்கல | 2,172.86மீற்றர் |
| 14. ஹோர்டன் வெ | 2,140.24மீற்றர் |
| 15. ஹக்கல ச | 2,117.98மீற்றர் |



ஏ.கஜனி,
கொ/மு/இந்துக் கல்லூரி, கொழும்பு-15.

# பசு



- பசு ஒரு மிருகம்.
- பசு பால் தரும்.
- அது புல் மேயும்.
- பசு கன்று ஈனும்.
- பசுவின் பால் மிகவும் சத்துள்ளது.
- பசுவை நாம் அன்பாக வளர்ப்போம்.

எம்.எஃப்.எஃப்.பாஹிஷா,
பது/கலைமகள் த.ம.வித்., ஹொப்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2012.02.08ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 350**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## 5

நாடுகளின் நாணய அலகுகளை தெரிவுசெய்து எழுதுக
(ருபியா/ ரிங்கிட்/ரியால்/டினார்/ரூபிள்)

1. குவைட் - ............................
2. ரஷ்யா - ............................
3. மலேசியா - ............................
4. சவூதி அரேபியா - ............................
5. இந்தோனேஷியா - ............................

## 2



எத்தனை உள்ளன?

* அப்பிள் - ............................
* தக்காளி - ............................
* வாழை - ............................
* ஆனைக்கொய்யா - ............................
* அன்னாசி - ............................
* எலுமிச்சை - ............................


## 4

பொருத்தமற்ற சொல்லின்கீழ்க் கோடிடுக

1. கண், பாதணி, செவி, வாய்
2. சூரியன், நட்சத்திரம், விண்கல், சூரிய குடும்பம்
3. ஊடகம், தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி
4. தாய், மகன், தந்தை, குடும்பம்


## 1

பின்வரும் விலங்குகளின் உணவுகளுடன் இணைக்க




## 3

கீழுள்ள தரவுகளைப் பயன்படுத்தி குறுக்கெழுத்துப் போட்டியை பூர்த்தி செய்க




## அறிவுக்கு விருந்து - 347 விடைகள்


**போட்டி: 02**

குரு, குலை, குன்று, அலை, அங்கு, அன்று, மரு, மறு,மறுகு, மசகு, மருங்கு, மலை, சருகு, சமன், சங்கு.

**போட்டி: 03**




**போட்டி: 04**



**போட்டி: 05**

அது அரசாங்கத்தினால் பொதுமக்களின் நலன்கருதி அமைக்கப்பட்டிருந்த பொது மலசலகூடத்தொகுதி. அதனை மேற்பார்வை செய்யவும் துப்புரவு செய்யவும் என ஒரு தொழிலாளி நியமிக்கப்பட்டிருந்தான். தனது தேவையின் நிமித்தம் அந்த இலவச மலசலகூடத்தொகுதிக்குள் சென்று வெளியே வரும்போது, அங்கிருந்த அந்த தொழிலாளி தலையைக் குனிந்தவாறே சுரேஷிடம் கைநீட்டினான். 'இலவச மலசலகூடப் பாவனைக்காக காசு கேட்கிறாயா?' என அவனை முறைத்துக்கொண்டே வெளியேறினார் சுரேஷ். சற்றுத் தூரம் சென்ற பின்னர்தான் அவருக்கு ஞாபகம் வந்தது. 'ஐயோ! பெறுமதி மிக்க கைப்பேசியை அங்கு தவறவிட்டு விட்டேனே என்று'. பதறியடித்துக்கொண்டு அங்கு ஓடி வந்த சுரேஷைக் கண்டு, ''ஐயா! இது உங்களுடையதா? சுத்தம் செய்யப் போனபோது அங்கு இருந்தது'' என்று கூறிய அந்த தொழிலாளி, சுரேஷிடம் அவரது கைப்பேசியை நீட்டினான். ''மிக்க நன்றிப்பா'' என்று கூறிய சுரேஷ், பத்து ரூபாய் தாள்காசை அவனுக்கு நீட்டினார். ''வேண்டாம் ஐயா! வேலைக்குத்தான் காசு கேட்டேன். உதவிக்காக அல்ல'' என்றான் அவன். சுரேஷ் திகைத்து நின்றார்.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 347 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.ரிப்கி, குருநாகல் வீதி, நம்புக்கனை.

**போட்டி: 02**
ஆ.ஆர்த்திகா, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

**போட்டி: 03**
க.ஸஷ்மிதா, விகாரை வீதி, திருகோணமலை.

**போட்டி: 04**
ஏ.சமீதி, மரிக்கார் வீதி,புத்தளம்.

**போட்டி: 05**
ஆஷா பானு, பிரதான வீதி, ஹல்துமுல்லை.

**பாராட்டுப் பெறுவோர்:**

★ எஃப்.சஹானா, செம்மீனோடை-07.
★ வி.சிலக்சினி, கந்தப்பளை.
★ ஹாஜரா இக்பால், அடுளுகம.
★ எம்.றிழா, குருநாகல்.
★ டி.துஸ்யந்தன், மெதகஸ்கொட.
★ எஃப்.இல்மியா, கொடியாகும்புர.
★ செ.சிவகாமி, எட்டியாந்தோட்டை.
★ எஸ்.ஸினியா, பொத்துவில்.
★ த.மிதுலா, சாமிமலை.
★ ஏ. அஸ்மி, பலப்பிட்டிய.

## விஜய் வாசகர் மடல்

2012 ஆம் ஆண்டு ஆரம்பமாகியதில் இருந்து வெளியாகிய விஜய் இதழ்கள் அனைத்தும் என்னை வியக்க வைத்தன. அந்தவகையில்: 'விண்வெளிப் பயணத்தின் மைல்கற்கள் சில', 'புதிய வருடத்தில் திட்டமிடலுடன் செயற்படுவோம்', 'நல்லொழுக்கம் கொண்டிருந்தால் நீங்களே சிறந்த செல்வம்', '2012 ஆம் ஆண்டிற்குரிய உலகத் திட்டங்கள்', 'தேங்காய் நண்டு', 'பலசரக்கு', 'உலகின் மிகப் பழைமையான செயற்கை உறுப்பு', 'துரிதமடையும் புவி வெப்பம்!' போன்ற தகவல்கள் உன்னை மேலும் விரும்பிப் படிக்க என்னைத் தூண்டியது.

- எம்.திவ்யரதி,
ஸ்ரீ கணேஷா த.ம.வித்., பதுளை.

ஒரு சமூகம் விழிப்புணர்ச்சி பெறவும் வெற்றியை நோக்கிப் பயணிக்கவும் வழிவகுக்கின்ற ஒரு பொக்கிஷமாகவே நீ திகழ்கின்றாய். சிறுவர் முதல் வயதானவர்கள் வரை அனைவரும் அறிவை வளர்த்துக்கொள்ளக்கூடியதாக உனது ஆக்கங்கள் அமைகின்றன. இத்தகைய நற்செயலுக்கு




பிரசுரமாகியிருந்த அனைத்து விடயங்களும் எனக்கு பயன் அளித்தன.

- பஸ்ரா லிஸான்,
நளீம் ஹாஜியார் ம. கல்.,
பேருவளை.

நீ வாரம் தோறும் தாங்கி வருகின்ற 'கதைகள்', 'ஆங்கிலம்-சிங்களம் பயில்வோம்', 'புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்' போன்றவற்றால் நான் அதிக பிரயோசனம் அடைகின்றேன். தரம் 4 இல் கல்வி கற்கும் நான், இது போன்ற இன்னும் பல தகவல்களை நீ தாங்கி வர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

- எம்.ஹுஸ்னி,
குருந்துகஹஎல முஸ்லிம் வித்.,
அக்குறனை.



விஜய்க்கு அனைவரினதும் சார்பில் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன்.

- எம். சப்வான்,
ஸாஹிரா கல்., மாத்தளை.

''நீ தருவாய் சிலவற்றை; அதில் நான் பெறுவேன் பலவற்றை'' என்றால் தவறில்லை. 'புது வருடத்தில் திட்டமிடலுடன் செயற்படுவோம்' என்ற ஆக்கம் என்னை மிகவும் கவர்ந்தது. 'வாரம் ஒரு நாடு', 'விண்வெளித் தகவல்கள்', 'உணவில் பலசரக்கு', 'தெரிந்துகொள்வோம்' போன்றவை என் அறிவைப் போஷிப்பதற்கான சிறந்த உரங்களாகும். உன் பணி மென்மேலும் தொடர மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

- எஃப்.நஸ்ரீன்,
ரிபாய் புர, தம்பாலை.

விஜய்யே! நீ வாரந்தோறும் சுமந்து வருகின்ற 'இராமாயணம்', 'விண்வெளித் தகவல்கள்', 'ஓவியம் வரைவோம்', 'சிறுகதைகள்' என்பன சிறப்பானவை. 'புதிய வருடத்தில் திட்டமிடலுடன் செயற்படுவோம்' எனும் ஆக்கம் சுவாரஸ்யமாக இருந்தது. மேலும் உன்னில் 'வாசகர் முகம்' இடம்பெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். 'புதிய வருடத்தில் திட்டமிடலுடன் செயற்படுவோம்', 'நல்ல உணர்வுகளை வளர்த்திடுவோம்', 'நல்லொழுக்கம் கொண்டிருந்தால் நீங்களே சிறந்த செல்வம்' போன்ற ஆக்கங்கள்



மாணவர்களுக்கு நல்லறிவுரைகளைப் புகட்டுவனவாக அமைந்துள்ளன. இன்றுபோல் என்றும் உன் புகழ் ஓங்க வாழ்த்துகின்றேன்.

-மூ.கணேசன்,
ஹீரஸ்ஸகல, கண்டி.

நீ சுமந்து வருகின்ற அறிவுத் தகவல்களை சுமார் 7 வருடங்களாக வாசித்து பயனடைகின்றேன். சிறார்கள் முதல் பெரியோர் வரை படிக்கக்கூடிய விடயங்கள் உன்னில் ஏராளம். உனது இந்த நற்சேவை மேலும் தொடர என் நல் வாழ்த்துக்கள்.

-புஷ்ரா ஜிப்ரி,
நாங்கல்ல, துல்ஹிரிய.

இந்த இதழில் (01.02.2012) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 08.02.2012.

அனுப்ப வேண்டிய முகவரி:



வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டிக்கால சந்திரவட்டக்கல்

ஓவியம் வரைவோம் - 87

ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்ரூஃப்

*அநுராதபுரக்கால மற்றும் பொலன்னறுவைக்கால சந்திரவட்டக்கற்களைவிட, அதன் பின்னர் வந்த காலங்களில் செதுக்கப்பட்ட சந்திரவட்டக்கற்கள் வேறுபட்ட அமைப்பைக் கொண்டவையாக இருந்துள்ளன. அந்தவகையில், கண்டிக்கால சந்திரவட்டக்கற்கள் முக்கோண வடிவம் கொண்டவையாகக் காணப்பட்டுள்ளன.*



கண்டிக்கால சந்திரவட்டக்கல்

கண்டிக்கால சந்திரவட்டக்கல்லின் மத்தியிலுள்ள செதுக்கல்கள் உச்சியிலிருந்து ஆரம்பமாகி, இரு மருங்கிலும் செல்கின்றதை அவதானிக்கலாம். இதன் மத்தியிலுள்ள வட்டத்திற்குள் இன்னொரு வட்டம் காணப்படுகின்றது. கண்டிக்கால சந்திரவட்டக்கற்களில் மலர், கொடி அலங்காரங்களே அதிகமாக இடம்பெற்றுள்ளன. சில இடங்களில் காணப்படும் கற்களில் மிருகங்களும் இடம்பெற்றுள்ளன.

கண்டிக்காலத்திற்குரிய சிறந்த சந்திரவட்டக்கற்களை ஹங்குரங்கெத தேவாலயம், லங்கா திலக விகாரை, கண்டி தலதா மாளிகை போன்ற இடங்களில் காணலாம். கண்டி தலதா மாளிகையில் உள்ள சந்திரவட்டக்கல்லில் முக்கோண வடிவிலான தாமரை அலங்காரமும் சதுர வடிவிலான கொடி அலங்காரமும் சோளக் கதிர்களும் மிருக அலங்காரங்களும் காணப்படுகின்றன.



தம்பதெனியகால சந்திரவட்டக்கல்

## தம்பதெனியகால சந்திரவட்டக்கல்

தம்பதெனிய காலத்திற்குரிய சிறந்த சந்திரவட்டக்கல்லானது, பெலிகல விகாரையில் காணப்படுகின்றது. இங்குள்ள சந்திரவட்டக்கல் செதுக்கல்களில் தாமரை இதழ்கள், நாகங்கள், சிங்கம், மகர உருவங்கள் போன்றவை காணப்படுகின்றன.

சந்திரவட்டக்கல் பற்றிய பல்வேறு கருத்துக்கள் காலத்திற்குக் காலம் நிலவியமையால், அதன் அமைப்பிலும் மாற்றங்கள் காலப் போக்கில் ஏற்பட்டிருக்கலாம் என்ற கருத்துக்களும் நிலவுகின்றன.



எம்.அனா, புனித சவேரியார் பெ.கல்., மன்னார்.



எஃப்.சிம்ரா, அறபா தே.பாட., வெலிகம.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



கு.வைஷேக், வெஸ்லி கல்லூரி, கொழும்பு.



பஸால் அஹமட், அமீனியா அ.கல்., நிகவெரட்டிய.



அப்ரார பானு, திகலி மு.ம.வித்., ஏத்தாளை.



பா.லக்ஷான், தமிழ் ம.வித்., ஹொரணை.




ஆதிக் அஹமட், ஸாஹிரா தே.பாட., புத்தளம்.



ரா.சிவதர்ஷினி, பாக்கியம் தே.பாட., மாத்தளை.



எம்.யமீன், ஒக்ஸ்போர்ட் ச.பாட.,வறகாபொளை.



எஃப்.பஹ்மா, பறகஹதெனிய தே.பாட., பறகஹதெனிய.



எம்.யாஸர், அல்-பத்ரியா மு.ம.வித்., வெயன்கொட.



என்.சஹீத், அல்-அஷ்ஹர் வித்., ஒலுவில்.

### தம்பி, தங்கைகளே!

## ‘கைவண்ணங்கள்’ குறித்து உங்கள் கவனத்திற்கு...!



உங்கள் கைவண்ணங்களை 'A4' தாளில் மட்டும் வரைந்து அனுப்புங்கள். அதன் பின்பக்கத்தில் உங்கள் பெயர், கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர் என்பனவற்றை தெளிவாக எழுதி அனுப்புங்கள்.

உங்கள் கற்பனைக்கேற்றவாறு, பல்வேறு கருப்பொருள்களின்கீழ் அலங்காரங்கள், காட்சிகள் என ஓவியங்களை வரைந்து அனுப்பி, கைவண்ணங்கள் பகுதியில் இடம்பிடித்துக்கொள்ளுங்கள். நேர்த்தியாகவும் அழகாகவும் வரையப்படும் ஓவியங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



எஃப்.ஹுஹா, நேகம மு.ம.வித்., கலேவெல.



தி.கஜானனன், இந்துக் கல்லூரி,யாழ்ப்பாணம்.

விஜய்
‘விழா உலா’
த.பெ.எண் 2037
கொழும்பு



யாழ்ப்பாணம்-மாதகலைச் சேர்ந்த பாலா-றூபினா தம்பதியரின் செல்வப் புதல்வன் பி.ஜெறூபன், 29.01.2012 அன்று தனது பன்னிரெண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் புனித தோமையாரின் அருள்பெற்று, பல்லாண்டுகள் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.



மாத்தளையைச் சேர்ந்த ஜீவா-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் ஜீ.ஷவிந்தன், 06.02.2012 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர்கள் அனைவரும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின் இறையாசி பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.



ஹெம்மாதகமையைச் சேர்ந்த ஹனீபா-பரீதா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா ஹன்பா, 25.01.2012 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஞ்செடி

குருவும், சீடர்களும் ஒரு கிராமத்தில் நடந்த விழாவிற்குச் சென்றுவிட்டு, மீண்டும் தமது ஆசிரமத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் சென்ற வழியில் இருந்த மேட்டுப் பகுதியில் ஒரு மாஞ்செடி வளர்ந்திருந்தது. ஒரு பக்கம் அதன் வேர்கள் வெளியே தெரிந்துகொண்டிருந்தன. எப்போது வேண்டுமானாலும் கீழே விழுந்து மண்ணோடு மண்ணாக அழிந்துபோகும் நிலையில் அது இருந்தது.

அவர்கள் பேசிக்கொண்டே சென்றுகொண்டிருக்கும்போது, குருவின் கண்ணில் அந்த மாஞ்செடி பட்டது. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்ற இரக்க குணம் கொண்ட குரு, அந்தச் செடியை வேரோடு பெயர்த்து பத்திரமாக எடுத்து வந்தார்.

இதைக்கண்ட அவர் சீடர்களில் ஒருவன், "குருவே, இதை எதற்கு எடுத்துக் கொண்டு வருகிறீர்கள்?" என்று கேட்டான்.

"உலகில் படைக்கப்பட்ட எந்த உயிரும் அநியாயமாக அழியக்கூடாது. இதன் நிலையை நீங்கள் அனைவரும் பார்த்தீர்கள் அல்லவா? இதை இப்படியே விட்டுவிட்டுப் போனால் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ சரிந்து விழுந்து அழிந்துபோகும். இதை வேறு இடத்தில் நட்டு வைத்தால் பிழைக்கும் அல்லவா?" என்றார்.

"குரு இதைப்பற்றி இந்த அளவுக்கு கவலைப்படுவதா? எத்தனையோ மனிதர்கள் அநாதைகளாக வாழ்கிறார்களே.... அவர்கள் வாழ்வுக்குக் கவலைப்படுவதில் நியாயம் இருக்கிறது. வெறும் மாஞ்செடிக்காக கவலைப்படுவதால் என்ன



பிரயோசனம்" என்று கேட்டார்கள் சீடர்கள்.

"மனிதர்கள் எப்படி வேண்டுமானாலும் வாழ முடியும். அவர்களுக்கும் உதவக் கூடியவர்கள் இருக்கின்றார்கள். தாவரங்கள் அப்படியல்ல. மனித உயிர்களை நம்பி, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் ஓர் உயிராகத்தான் இந்த மாஞ்செடியை நான் பார்த்தேன். உலகில் படைக்கப்பட்ட எந்த உயிரையும் சமமாகப் பாவிப்பவர்கள்தான் குருமார்கள்" என்றபடி நல்ல இடமாகப் பார்த்து அந்த மாஞ்செடியை நட்டுவிட்டு ஆசிரமத்திற்குப் புறப்பட்டார்.

பத்து ஆண்டுகள் கழிந்தன. அந்த மாஞ்செடி நட்ட வழியாக குருவும், சீடர்களும் வந்துகொண்டிருந்தனர். தான் நட்ட மாஞ்செடி பெரிய மரமாகிக் கொத்துக் கொத்தாகப் பழங்கள் தொங்கும் அழகைக் கண்டு இன்பக் கண்ணீரில் மிதந்தார் குரு. சீடர்கள், பசி தாளாமல் மாம்பழங்களைப் பறித்துச் சாப்பிட ஆரம்பித்தனர்.

"சீடர்களே, இந்த மாமரம் எது என்பது உங்களுக்குத் தெரிகிறதா!" என்று கேட்டார் குரு.

சிறிது நேரம் யோசித்த அவர்கள், "குருவே, நீங்கள் நட்ட மரம்தானே?" என்றனர்.

"அதே மரம்தான்! அன்றைக்கு இதைக் காப்பாற்றாமல் போயிருந்தால், இப்போது உங்கள் பசி போக்க உதவி இருக்குமா? நமக்குப் பயன்படாவிட்டாலும், ஏனைய உயிர்களுக்குப் பயன்பட்டால் போதும் என்றுதான் நான் இதனை நட்டு வைத்தேன். அதோ! பாருங்கள்... பறவைகளும் மாம்பழங்களைச் சாப்பிட்டு பசி ஆறுகின்றன" என்று சுட்டிக்காட்டினார் குரு.

"குருவே, மரங்கள் மனித வாழ்க்கைக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் உதவும் தாய்மடி என்பதைப் புரிந்து கொண்டோம்" என்று ஒருமித்த குரலில் சீடர்கள் கூறினர். குருவும் மகிழ்ச்சியுடன் நடந்தார்.



# தன்வினை தன்னைச் சுடும்!

ஆலங்குடி என்ற ஊரில் வேட்டைக்காரன் ஒருவன் இருந்தான். அவன் விலங்குகளைப் போல ஓசை எழுப்பும் ஆற்றல் கொண்டவன். அந்த ஊருக்கு அடுத்த அடர்ந்த காட்டில் பலவகையான கொடிய விலங்குகள் வாழ்ந்து வந்தன. அவற்றின் இயல்பை நன்கு அறிந்திருந்தான் அவன்.

ஒருநாள், ஒரு முனிவர் அந்தப் பக்கமாக வந்தார். அவரை சிங்கத்தைப் போல் உறுமி பயந்து ஓட வைத்தான் அந்த வேட்டைக்காரன்! அப்போது முனிவர், "மகனே! உனக்குக் கிடைத்திருக்கும் இந்த அரிய திறமையை நல்ல காரியங்களுக்கு மாத்திரம் பயன்படுத்து இல்லையென்றால் ஆபத்து நேரிடும்" என்றார்.

"சரி, சரி போ... போ..... எனக்கு நீ புத்தி சொல்லாதே" என்று கிண்டல் செய்தான் அந்த வேட்டைக்காரன்.

இவ்வாறே, மனிதர்களை ஓடவிட்டு, ஏமாற்றி சிரித்து மகிழ்வதில் அவன் இன்பம் கண்டான். ஒருநாள், காட்டில் மானைப் போல் குரல் எழுப்பிக் கொண்டிருந்தான் அந்த வேட்டைக்காரன். உண்மையான மான்தான் கத்துகிறது என்று நினைத்து, அங்கு வரும் மான்களைக் கொல்ல, கையில் அம்புடன் தயாராக இருந்தான். ஆனால், அக்காட்டில் வசித்த ஓநாய் ஒன்று 'தனக்கு உணவாகும் மான் இங்கு எங்கோ கத்துகிறது, என்ற எண்ணத்தில் மானின் குரல் வந்த திசையை நோக்கி ஓடி வந்தது. மானின் வருகைக்காகக் காத்திருந்த வேடன், ஓநாயைக் கண்டு அதிர்ச்சி அடைந்தான்.

'இந்த ஓநாயிடமிருந்து எப்படித் தப்பிக்கப் போகிறோம்' என்று நினைத்த அவன், உடனே தன் குரலைப் புலிபோன்று மாற்றிக் கத்தினான். புலியின் உறுமல் கேட்ட ஓநாய் அஞ்சி அங்கிருந்து தப்பி ஓடியது.

ஆனால், அந்த வழியாக வந்த புலி ஒன்று இந்த சத்தத்தைக் கேட்டு, "ஆ! இந்தக் காட்டில் இன்னொரு புலி இருப்பது நமக்குத் தெரியாமல் போயிற்றே!' என்று கூறி குரல் வந்த திசையை நோக்கி நடந்தது.

புலி வருவதைக்கண்ட வேடன், "ஓநாயிடம் இருந்து தப்பித்தோம் என்று நினைத்தால் கொடிய விலங்காகிய புலி வருகிறதே.... என்ன செய்வது' என்று சிந்தித்தான்.

இதனால், தன் குரலை மாற்றிச் சிங்கம் போல கர்ஜனை செய்யத் தொடங்கினான்.


குரல் கேட்டதுதான் தாமதம். வேடனை நோக்கி வந்து கொண்டிருந்த புலி, "தப்பினேன், பிழைத்தேன்' என்று ஓட்டம் பிடிக்கத் தொடங்கியது. இதைப் பார்த்த அவன் மகிழ்ச்சி அடைந்தான். ஆனால், வேடனின் மகிழ்ச்சி அதிக நேரம் நீடிக்கவில்லை.

'நான் இருக்கும் காட்டில் இன்னொரு சிங்கத்தின் குரலா?' என்று கோபத்தில் அங்கே பாய்ந்து வந்தது சிங்கம்.

அதைப் பார்த்ததும், "எப்படிக் குரல் எழுப்பித் தப்பிப்பது?' என்று தெரியாமல் திகைத்து நின்றான் வேடன்.

வேறொரு சிங்கத்தை எதிர் பார்த்து வந்த சிங்கம் வேடனைக் கண்டதும், அவன்மீது பாய்ந்து அவனைக் கொன்று தின்றது.

மற்றவர்களை ஏமாற்றி மகிழ்ந்து இன்பம் கண்ட வேடன், இறுதியில், சிங்கத்திற்கே இரையாகிப் போனான்.



# கர்வம் கொண்ட யானை

காட்டில், ஒரு யானை தான் தான் பெரியவன் என்று கர்வம் கொண்டு அட்டகாசம் செய்து வந்தது. அது சிறிய மிருகங்களைக் கண்டால் துரத்திப் பிடித்து, காலால் மிதித்துக் கொன்றும் விடும். இதனால், காட்டில் உள்ள ஏனைய மிருகங்கள் பயந்து நடுங்கின. அதன் தொல்லை அளவுக்கு மீறிப்போகவே, அனைத்து மிருகங்களும் சிங்கராஜாவிடம் சென்று முறையிட்டன.

சிங்கராஜா நரியைப் பார்த்து அந்த யானையை அழைத்து வரும்படி கூறினார். ஆனால், கர்வம் கொண்ட யானை சிங்கத்தின் அழைப்பை மதிக்கவில்லை. சிங்கராஜாவும், அந்த யானையைப் பின்னர் பார்த்துப் பேசிக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு விட்டார்.

ஒருநாள், வேட்டைக்காரர்கள் வெட்டிப் போட்டிருந்த ஆழமான குழியில் அந்தக் கர்வக்கார யானை விழுந்துவிட்டது. அப்போது, யாரும் தனக்கு உதவி செய்ய வரமாட்டார்கள் என்று உணர்ந்த யானை காடே அதிரும்படி பிளிர ஆரம்பித்தது.

யானையின் அலறல் சத்தத்தைக் கேட்ட சிங்கராஜா, அந்த இடத்துக்கு வந்து பார்த்தார். அனைத்துக் காட்டு மிருகங்களையும் அழைத்து, யானை குழியைவிட்டு மேலே வருவதற்கான ஏற்பாட்டைச் செய்யுமாறு என்று கட்டளையிட்டார்.

ராஜாவின் கட்டளைக்கு விருப்பமின்றிக் கீழ்ப்படிந்த மிருகங்கள் அனைத்தும் வெறுப்புடன் அங்கு சென்றன. அவற்றில் சில, வேட்டைக்காரர்கள் அந்த இடத்துக்கு வராது காவல் காத்தன. ஏனைய மிருகங்கள் வேகவேகமாய் குழியில் மண்ணைத் தள்ளி, யானையை மேலே கொண்டு வந்தன.

அன்றிலிருந்து தனது கர்வத்தை விட்ட யானை, தன்னைக் காப்பாற்றியவர்களுக்கு நன்றி கூறி, அனைத்து மிருகங்களுடனும் நட்புடன் பழக ஆரம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் மாமாவின் வீட்டில் இடம்பெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்**

නැන්දා: **තේ මේසෙට එන්න අයියේ. අක්කත් එන්න.**
தே மேசெட்ட என்ன அய்யே. அக்கத் என்ன.
மாமி: **தேநீர் மேசைக்கு வாருங்கள் அண்ணா. அக்காவும் வாருங்கள்.**

අක්කා: **මල්ලි, මේ පුටුවේ වාඩිවෙන්න.**
மல்லி, மே பு(ட்)டுவே வாடிவென்ன.
அக்கா: **தம்பி, இந்தக் கதிரையில் அமருங்கள்.**

පුතා: **හොඳයි අක්කේ.**
ஹொந்தய் அக்கே.
மகன்: **நல்லது அக்கா.**

දුව: **ආ... නැන්දා අලුවත් හදලා. මම හරි ආසයි අලුවා කන්න.**
ஆ..... நெந்தா அலுவத் ஹதலா. மம ஹரி ஆஸய் அலுவா கன்ன.
மகள்: **ஆ... மாமி அல்வாவும் செய்திருக்கிறார். எனக்கு அல்வா சாப்பிட மிகவும் விருப்பம்.**

නැන්දා: **පුතා, කෙසෙල් ගන්න.**
புதா, கெஸெல் கன்ன.
மாமி: **மகன், வாழைப்பழம் எடுங்கள்.**

පුතා: **සව්දොදොල් හරි රසයි නැන්දේ.**
சவ்தொதொல் ஹரி ரசய் நெந்தே.
மகன்: **சவ்தொதொல் நல்ல ருசி மாமி.**

නැන්දා: **ඉතින් පුතා තව ගන්න.**
இதின் புதா தவ கன்ன.
மாமி: **இன்னும் எடுத்துக்கொள்ளுங்கள் மகன்.**

පුතා: **අන්න මල්ලිත් ආවා. මල්ලි එන්න තේ බොන්න.**
அன்ன மல்லித் ஆவா. மல்லி என்ன தே பொன்ன.
மகன்: **அதோ, தம்பியும் வந்துவிட்டான். தம்பி வாருங்கள் தேநீர் குடிப்போம்.**

නැන්දා: **මම ඔයාලට තේ අරගෙන එන්නම්.**
மம ஒயாலட்ட தே அறகென என்னம்.
மாமி: **நான் உங்களுக்குத் தேநீர் எடுத்துக்கொண்டு வருகிறேன்.**

තාත්තා: **නංගි, මට සීනි අඩුවෙන් දාන්න.**
நங்கி, மட்ட சீனி அடுவென் தான்ன.
அப்பா: **எனக்கு சீனி குறைவாகப் போடுங்கள் தங்கச்சி.**

නැන්දා: **හොඳයි අයියේ.**
ஹொந்தய் அய்யே.
மாமி: **நல்லது அண்ணா.**

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. தேநீர் மேசைக்கு வாருங்கள்.
..........................................................................

ii. இந்தக் கதிரையில் அமருங்கள்.
..........................................................................

iii. தேநீர் எடுத்துக்கொண்டு வருகிறேன்.
..........................................................................






**'While'** எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே அவதானிப்போம்.

(அ) அந்தச் சிறுவர்கள் தங்களின் பருவகால விடுமுறையை திருகோணமலையில் கழித்துக்கொண்டு இருந்தவேளை, கோணேஸ்வரர் கோயிலுக்கு விஜயம் செய்தனர்.
While some children were spending their vacation in Trincomalee, they visited the Koneswaram Temple.

- அந்தச் சிறுவர்கள் தங்களின் பருவகால விடுமுறையை திருகோணமலையில் கழித்துக்கொண்டு இருந்தவேளை,
While the children were spending their vacation in Trincomalee,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- அவர்கள் கோணேஸ்வரர் கோயிலுக்கு விஜயம் செய்தனர்.
They visited the Koneswaram Temple.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஆ) ரகுஜனும் கமலனும் தமது பரீட்சைக்காகப் படித்துக்கொண்டு இருந்தவேளை, ரகுஜன் சுகவீனமுற்றான்.
While Ragujan and Kamalan were studying for their examination, Ragujan fell ill.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- ரகுஜனும் கமலனும் தமது பரீட்சைக்காகப் படித்துக்கொண்டு இருந்தவேளை,
While Ragujan and Kamalan were studying for their examination,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- ரகுஜன் சுகவீனமுற்றான்.
Ragujan fell ill.
(பிரதம வாக்கியப் பகுதி-Principal Clause)

(இ) நாங்கள் கடந்த இரவு உறங்கிக்கொண்டு இருந்தவேளை, பெரிய சத்தம் ஒன்றை செவியுற்றோம்.
While we were sleeping last night, we heard a big noise.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

- நாங்கள் கடந்த இரவு உறங்கிக்கொண்டு இருந்தவேளை,
Last night while we were sleeping,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- நாங்கள் பெரிய சத்தம் ஒன்றை செவியுற்றோம்.
We heard a big noise.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(ஈ) அந்தச் சிறுவர்கள் கால்பந்து விளையாடிக்கொண்டு இருந்தவேளை, தமது பாதங்களைக் காயப்படுத்தினர்.
While the children were playing football, they hurt their feet.
(கலப்பு வாக்கியம் - Complex Sentence)

- அந்தச் சிறுவர்கள் கால்பந்து விளையாடிக்கொண்டு இருந்தவேளை,
While the children were playing football,
(துணை வாக்கியப் பகுதி -Subordinate Clause)
- அவர்கள் தமது பாதங்களைக் காயப்படுத்தினர்.
They hurt their feet.
(பிரதம வாக்கியப் பகுதி -Principal Clause)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



* ஆசியாவில் டோக்கியோ, சியோல், பீஜிங் ஆகிய நகரங்களில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுள்ளது. இவ்வாறு தென் அமெரிக்க கண்ட நகரமொன்றில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுள்ளதா?

  2016 இல் 31 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் பிரேசில், ரியோடி ஜெனீரோ நகரில் முதன் முதலில் நடைபெற உள்ளது



* சூரியஒளியில் ஏழு நிறங்கள் இருப்பதைக் கண்டுபிடித்தவர் யார்?

  கலிலியோ கலிலி



* பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றுவதற்கு 24 மணித்தியாலங்கள் எடுக்கின்றது. பூமி சூரியனை ஒரு முறை நீள்வட்டப் பாதையில் சுற்றி வர எவ்வளவு காலம் எடுக்கின்றது?

  365 நாட்களும் 6 மணித்தியாலங்கள் (365 1/4 நாள்)



* 'மூலதனம்' என்ற நூலின் ஆசிரியர் 'கால்மாக்ஸ்' ஆவார். Mother (தாய்) என்ற நூலின் ஆசிரியர் யார்?

  மக்சிம் கோர்கி



* இறக்கை இல்லாத பூச்சியினம் 'பேன்' ஆகும். மிகச் சிறிய இதயம் கொண்ட விலங்கினம் எது?

  சிங்கம்



* தெற்காசிய நாடுகளில் ஆகக் கூடிய தலா வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் கொண்ட நாடு எது? அதன் தலா வருமானம் என்ன?

  இலங்கை (2010) 2339 USD

* இலங்கையில் சுமார் 41 லட்சம் மாணவர்கள் அரச, தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு கல்வி கற்பிக்க எவ்வளவு தொகையான ஆசிரியர்கள் உள்ளனர். எத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் உள்ளார்?



  சுமார் 32,7624 ஆசிரியர்கள். 19 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர்

* புத்த பெருமான் இலங்கைக்கு விஜயம் செய்த இடங்களாகக் கருதப்படும் இடங்கள் எவை?



  களனி, நயினாதீவு (நாகதீபம்), மகியங்கனை



* சுயெஸ் கால்வாய் எந்தெந்தக் கடல்களை இணைக்கின்றது?

  செங்கடல், மத்திய தரைக்கடல்

* உலகில் மிகவும் உயரமான இடத்திலுள்ள விமான நிலையம் எது?

  'வாம் டமோர்' விமான நிலையம் - திபெத்திலுள்ளது



* ஐக்கிய இராச்சியத்தின் தலைநகர் லண்டனின் அருகில் ஓடும் நதியின் பெயர் என்ன?

  தேம்ஸ் நதி

தொகுப்பு:
உடுவை பரந்தாமன்

# வளர்ச்சி கண்டுள்ள சீனா சலுகைகளை எதிர்பார்ப்பதா?





'மக்கள் தொகையில் மட்டுமன்றி பொருளாதார வளத்திலும் பெரிய நாடாகவே உள்ள நிலையில் தனக்கென சிறப்புச் சலுகைகள் வழங்கப்படவேண்டும் என்று சீனா எதிர்பார்க்கக் கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார். பத்திரிகையொன்றிற்கான பேட்டியொன்றிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர்: "தெற்காசியாவில் மட்டுமன்றி உலகின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த எல்லா நாடுகளுக்கும் ஒரே விதமான பொதுவான சர்வதேச விதிமுறைகளே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இதில் எந்தவொரு நாடும் தனிப்பட்ட சலுகைகளை எதிர்பார்க்கக் கூடாது. இத்தகைய நிலையில் சீனா தனது நலனை மட்டுமே சிந்தித்து செயற்படக்கூடாது. உலக நாடுகளுக்கான பொது விதிமுறைகளை சீனா கடைப்பிடிக்கவேண்டும். சீனாவின் வளர்ச்சியை அமெரிக்கா கட்டுப்படுத்த முயற்சிக்காது. ஆனால், தொடர்ந்தும் சீனாவை ஏழை நாடாகக் காட்டி சலுகைகளை எதிர்பார்ப்பதை அமெரிக்கா அனுமதிக்காது" என்றும் தமது பேட்டியில் ஒபாமா குறிப்பிட்டுள்ளார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தொடர்ந்தும் அமெரிக்காவே ஆதிக்கம் செலுத்தும் என்பதை சீனாவிற்கு உணர்த்தவே இந்தக் கருத்துக்களை ஒபாமா தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

# படகில் உலகைச் சுற்றிய யுவதி

நெதர்லாந்தைச் சேர்ந்த 16 வயதுடைய யுவதியொருவர் தனியாக படகின்மூலம் உலகை சுற்றி வந்து சாதனை படைத்துள்ளார். லோரா டெக்கர் என்ற பெயரையுடைய இவர் படகின்மூலம் உலகை சுற்றிவருவதற்கு 1 வருடகாலத்தை எடுத்துள்ளார்.

2011 ஜனவரி 20 ஆம் திகதி ஆரம்பித்த இவரது இந்த கடல் பயணம் 2012 ஜனவரி 21 ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.





கரீபியன் பிராந்தியத்தை நிறைவாக வந்தடைந்த இவருக்கு மக்கள் வரவேற்பளித்தனர்.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

### யேமன்

# ஜனாதிபதி சிகிச்சைக்காக அமெரிக்கா பயணம்



மக்களின் அதிருப்திக்கு ஆளாகிய யேமன் நாட்டின் ஜனாதிபதி அலி அப்துல்லா சாலே அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ளார். நாட்டின் ஆட்சி அதிகாரத்தை உப ஜனாதிபதியிடம் ஒப்படைத்துவிட்டே, அவர் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்துள்ளார். 33 வருடங்களாக தான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் ஏதேனும் தவறுகள் நடந்திருந்தால் அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கோருவதாகத் தெரிவித்தே அவர் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்.

மருத்துவ சிகிச்சைகளுக்காகவே அமெரிக்கா செல்வதாகவும், சிகிச்சைகளின் பின்னர் நாடு திரும்பவுள்ளதாகவும் ஆனால் மீண்டும் நாடு திரும்புகையில் யேமனின் ஜனாதிபதியாக அல்லாமல் மக்கள் 'காங்கிரஸ் கட்சியின்' தலைவராகவே திரும்புவேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

யேமன் ஜனாதிபதிக்கு அமெரிக்கா வருவதற்கு விஸா அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. யேமனின் ஆளுங்கட்சிக்கும் ஜனாதிபதி சாலேக்கும் எதிராக அண்மையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் போது, ஆர்ப்பாட்டக்காரர்களை ஆயிரக்கணக்கில் கொன்றொழித்த குற்றச்சாட்டை ஜனாதிபதி சாலேமீது அவரது எதிர்ப்பாளர்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும், 'சாலே' அமெரிக்காவுடன் நட்புறவு பேணி வருவதன் காரணமாக, லிபிய ஜனாதிபதி கடாபிக்கு நேர்ந்த நிலை ஏற்படாதவாறு அமெரிக்கா அவரைக்காத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 345

**கேள்வி:** படகில் உலகைச் சுற்றிய யுவதி கடைசியாக எந்த நாட்டை வந்தடைந்தார்?

**சரியான விடை................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 345,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 343 இன் சரியான விடை: பஹ்ரைன்

**பரிசு பெறுவோர்**

எம். சபா,
வறக்காமுறை, உக்குவளை.

கரண் ஸ்ரீ சத்தியன்,
கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

எஃப். சியானா,
மிரிஸ்வத்தை, பலாங்கொடை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாகிஸ்தானின் முழுநேர பயிற்சியாளராக வட்மோர்

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக பதவியேற்பது குறித்து அவுஸ்திரேலியாவின் வட்மோர் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

ஏற்கனவே பயிற்சியாளராக இருந்த முன்னாள் பாகிஸ்தான் வீரர் வக்கார் யூனுஸ் அப்பதவியிலிருந்து விலகியதையடுத்தே, பயிற்சியாளர் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டது. இப்பதவிக்கென வட்மோர் உட்பட பலர் விண்ணப்பங்களை அனுப்பியிருந்தனர். ஆனால், வட்மோரின் விண்ணப்பத்திலேயே பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிக கவனத்தை செலுத்தியது. 1996 ஆம் ஆண்டு இலங்கை அணி உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்டபோது, வட்மோர் இலங்கை அணியின் பயிற்சியாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானின் லாகூர் நகரிற்கு ஏற்கனவே விஜயத்தை மேற்கொண்டுள்ள வற்மோர் அங்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். இங்கிலாந்து-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டித் தொடர் முடிவடைந்ததன் பின்னர் பாகிஸ்தானின் உத்தியோகபூர்வமான முழுநேர பயிற்சியாளராக வட்மோர் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# விலக்குமுன் விலகினார் திலகரட்ன டில்ஷான்



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் திலகரட்ன டில்ஷான் தலைவர் பதவியிலிருந்து விலகியதையடுத்து, அவ்விடத்திற்கு மஹேல ஜயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். மஹேல ஜயவர்தன ஏற்கனவே இலங்கை அணியின் தலைவராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, பெப்ரவரி மாதம் அவுஸ்திரேலியாவில் இடம்பெறவுள்ள மும்முனைப் போட்டி தொடரில் மஹேல ஜயவர்தனவின் தலைமையிலான அணியே போட்டியிடும். இலங்கையின் தலைமைப் பொறுப்பை டில்ஷான் ஏற்றதிலிருந்து இலங்கை அணி குறிப்பிடத்தக்க அளவில் பிரகாசிக்கவில்லை. சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரிலும் பாரிய பின்னடைவை சந்தித்தது இலங்கை அணி.

அதுமட்டுமன்றி, அணிக்குள் புரிந்துணர்வின்மையும் ஏற்பட்டிருந்ததாக குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தன. இவை அனைத்தையும் கவனத்தில்கொண்டிருந்த புதிய கிரிக்கெட் சபை மற்றும் தேர்வுக் குழுவினால் இலங்கை அணியின் தலைமைப் பதவியிலிருந்து டில்ஷான் விலக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு எழுந்திருந்தது. இதன் காரணமாகவே, கௌரவமாக டில்ஷான் பதவி விலகியுள்ளார் என்றும் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

# பாகிஸ்தானுக்கே விளையாடுவேன் - அ∴ப்ரிடி



பங்களாதேஷில் நடைபெறவுள்ள பங்களாதேஷ் பிரிமியர் லீக் போட்டியில் தான் கலந்துகொள்ளப் போவதில்லை என்று பாகிஸ்தான் அணியின் அஃப்ரிடி தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 10 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ள மேற்படி பங்களாதேஷ் பிரிமியர் லீக் போட்டிகளுக்கென வீரர்களைத் தெரிவுசெய்யும் ஏலத்தில் அஃப்ரிடி அதிக தொகையான 8.5 கோடிக்கு ஒப்பந்தமாகியிருந்தார்.

இந்நிலையிலேயே, அஃப்ரிடி தனது முடிவை அறிவித்துள்ளார். நாட்டுக்காக விளையாடுவதே தனக்கு முக்கியம் என்றும் பாகிஸ்தான் அணிக்கு விளையாடுவதற்கே ஆர்வமாக இருப்பதாகவும் எனவே, பங்களாதேஷ் பிரிமியர் லீக் போட்டியில் விளையாட மாட்டேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கை அணி முன்னேற்றம்

International Cricket Council

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் போட்டிக்கான தரப்பட்டியலில் இலங்கை அணி நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. தென் ஆபிரிக்கா அணியுடனான போட்டித் தொடரில் கடைசி இரண்டு போட்டிகளில் இலங்கை அணி வெற்றியீட்டியதன் மூலமே ஐந்தாவது இடத்திலிருந்து நான்காவது இடத்திற்கு இலங்கை முன்னேறியுள்ளது.

மறுபுறம் இரண்டாம் இடத்தில் இருந்த தென் ஆபிரிக்கா அணி மூன்றாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டுள்ளது. இதில் 111 புள்ளிகளுடனேயே, இலங்கை அணி நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செரினா தோல்வி



அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெறும் பகிரங்க டெனிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறியுள்ளார். நான்காவது சுற்று ஆட்டத்தின்போதே, ரஷ்ய வீராங்கனையான மகரோவாவிடம் முதலாவது செட்டில் 6-2 என்ற செட் கணக்கில் செரினா தோல்வியடைந்துள்ளார்.

தொடர்ந்து இரண்டாவது செட்டிலும் 6-3 என்ற செட் கணக்கில் மீண்டும் தோல்வி கண்டு போட்டியிலிருந்து வெளியேறினார் செரினா.

இதற்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் 5 தடவைகள் செம்பியன் கிண்ணத்தை செரினா வில்லியம்ஸ் கைப்பற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெட்கப்படுகிறார் கபில்



இந்திய கிரிக்கெட் வீரர்களின் பின்னடைவு நிலையையிட்டு வெட்கப்படுவதாக இந்திய அணியின் முன்னாள் தலைவரான கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுடன் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் இந்திய அணி படுதோல்வி நிலையை அடைந்தமை குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த கருத்தைக் கூறியுள்ளார்.

மேலும், கருத்துத் தெரிவித்துள்ள கபில்தேவ், அவுஸ்திரேலியாவுடனான தொடரில் இந்திய அணியினர் மோசமாகவே விளையாடினர். டெஸ்ட் தரப்படுத்தலில் முதலாவது இடத்தைப் பிடித்தபோதிலும், 6 மாதங்கள் மாத்திரமே சிறப்பாக விளையாடியது. இருப்பினும், தற்போது இந்திய அணி படுபாதாளத்தில் கிடக்கின்றது. ஒரு காலத்தில் சிறப்பாக விளையாடிய அதே வீரர்கள்தான் தற்போது பலவீனமடைந்துள்ளனர்.

# ரிக்கி பொன்டிங் 13 ஆயிரம் ஓட்டங்கள்...!



அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட்டில் நடைபெற்ற நான்காவது டெஸ்ட் போட்டியின்போது, ஆஸி அணியின் ரிக்கி பொன்டிங் 13 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

இதன்படி, 13 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 3 ஆவது வீரர் என்ற பெருமையை பொன்டிங் பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் களத்தில் பொன்டிங் இரண்டு சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் 13 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றமை, தனது 41 ஆவது சதத்தைக் கடந்தமை ஆகியவையே அந்த இரண்டு சாதனைகளுமாகும்.

ரிக்கி பொன்டிங்கிற்கு முன்னதாக இந்திய வீரர்களான டென்டுல்கர் 15,.432 ஓட்டங்களுடனும் டிராவிட் 13, 262 ஓட்டங்களுடனும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



நாபாவளை மு.ம.வித்தியாலய மாணவியான எஃப்.றிம்தா, 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முஹம்மது அலவி-றிஸ்வியா தம்பதியரின் புதல்வியாவார்.



மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனான என். அப்துல்லாஹ், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.பஸ்ரா, 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹுரீமலுவ தாறுல் உலூம் மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



ஆசிக் இலாஹி, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனாவார்.



எஃப். நஸ்லியா, 159 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹுரீமலுவ தாறுல் உலூம் மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



ஆபித் அஹமட், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனாவார்.



ஹுரீமலுவ தாறுல் உலூம் மு.ம.வித்தியாலய மாணவியான எஃப்.இல்மா, 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மாத்தளை ஸாஹிரா கல்லூரி மாணவனான ஐ.மொஹமட், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நாபாவளை மு.ம.வித்தியாலய மாணவியான எஃப்.ஷஹ்மா, 174 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அனஸ்-நஸ்லினா தம்பதியரின் புதல்வியாவார்.



மடவளை பஸார் மதீனா தேசிய பாடசாலை மாணவியான எஃப்.மின்ஹா, 168 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சுலைஹார்-சித்தி ஸாஹிரா தம்பதியரின் புதல்வியாவார்.



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவியான சஜோ பமீலா, 177 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



சபியா கான், 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நிகவடவன முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய மாணவியான இவர், முந்தாஸ் கான்-சைனாஸ் தம்பதியரின் புதல்வியாவார்.



அஸ்லூப் அகமட், 176 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவனாவார்.



எஃப். ஹஸ்னா, 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நிகவடவன முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய மாணவியான இவர், முஸையிர்-சித்தி நிஸாயா தம்பதியரின் புதல்வியாவார்.



எஸ்.அப்லா, 175 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவியாவார்.



நிகவடவன முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய மாணவியான எஃப். ருஸ்தா, 168 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நஜிப்தீன்-காமிலா தம்பதியரின் புதல்வியாவார்.



மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி மாணவனான எம்.ஸப்ஹத், 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எம்.அஸ்பாக், 160 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நிகவடவன முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலய மாணவனான இவர், முபாரக்-ரிப்கானா தம்பதியரின் புதல்வராவார்.

*ஆளுமை நிறைந்த மாணவர் ஒருவரில் அனைத்து அம்சங்களும் நிறைவு பெற்றிருப்பது அவசியமாகும். அதேபோல், அவர் தன்னைச் சுற்றி உள்ளவர்களுடன் தொடர்புகொள்வது என்பதும் அந்த ஆளுமைப் பண்பில் உள்வாங்கப்பட்ட விடயமாகும். அந்தவகையில்,*



# மாணவர்களுக்கிடையிலான நட்பு

*சிறந்த மாணவர் ஒருவர் தனக்கு ஏற்ற சிறந்த நண்பர்களைக் கொண்டிருப்பது கட்டாயமாகும்.*



## கல்வி

## முகாமைத்துவம் - 92

## கற்றலுக்கான ஆலோசனைகள்

### நட்பின் அவசியம்

மாணவரொருவர் கல்வியைக் கற்பதற்கு மாத்திரம் நேரத்தை ஒதுக்குபவராகவோ அல்லது புத்தகங்களோடு மட்டும் தொடர்பை உடையவராகவோ இருந்துவிடுவது ஏற்புடையதன்று. ஏனெனில், இவை மாணவரொருவரின் அறிவில் மாற்றத்தை ஏற்படுத்தினாலும், அவரது மன வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பில்லை. அத்துடன், சமூகத்தினருடனும் பாடசாலையில் ஏனைய மாணவர்களுடனும் தொடர்பு அற்றுக் காணப்படும்போது, குறித்த மாணவரது உளவியல் தேவை சரிவரப் பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே காணப்படும். எனவே, ஒரு மாணவர் தனது கல்வியில் அக்கறை செலுத்துவது போன்றே, தன்னைச் சூழ இருப்பவர்களுடனும் மகிழ்ச்சியான- சிறப்பான தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அதற்கு கைகொடுக்கும் ஓர் அம்சமாகவே 'நட்பு' காணப்படுகின்றது.

### சிறந்த நண்பர் யார்?

பொதுவாக, ஒருவரது பண்பை அவரது நண்பர்களை வைத்தே கணிப்பிட முடியும்







எனக் கூறுவர். ஆகவே, நண்பர்களுடனான தொடர்பானது, எமது நடத்தையில் மாத்திரமன்றி, கல்வியிலும் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதற்கமைய, ஒரு மாணவருக்கும் ஏனைய மாணவர்களுக்கும் இடையிலான தொடர்பானது, அவர்களது கல்வியில், பழக்கவழக்கங்களில், ஒழுக்கத்தில் நேரடியாக தாக்கம் புரியக்கூடியதாகக் காணப்படுகின்றது. ஆகவே, மாணவரொருவர் தனக்கேற்ற ஒரு நண்பனைத் தெரிவுசெய்யும்போதும் பழகும்போதும் ஒழுக்கத்தை கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும். ஒழுக்கத்திற்கு கேடு விளைவிக்கக்கூடியதாக இருக்கும் நண்பர்களுடன் தொடர்பைப் பேணுவது நெறி தவறிச் செல்லும் செயற்பாட்டின் பக்கம் அவரைத் திருப்பிவிடும்.

ஒரு நண்பன் கற்றலில் ஈடுபடாமல், முறைகேடான செயல்களில் ஈடுபடும்போது, அந்த நண்பனின் தூண்டுதலாலும் வற்புறுத்தலாலும் தவறான பாதைகளில் நுழைகின்ற ஏராளமான மாணவர்களை நாம் காண்கின்றோம். இவர்கள் காலப்போக்கில் தம்மை அறியாமலேயே, தமது பண்பு, கல்வி என்பனவற்றில் பாதிப்பை ஏற்படுத்திக்கொள்கின்றனர். எனவே, தாம் நட்புக்கொண்டிருக்கும் சக மாணவர்கள் வழி தவறிச் செல்கின்றனர் என்பதை உணர்ந்தவுடன், அவர்களுக்கு அதுபற்றி எடுத்துக்கூறி நல்வழிப்படுத்த முனையுங்கள். ஆனால், அது முடியாத காரியம் எனக் கருதும் பட்சத்தில் அவர்களிடமிருந்து இயன்றளவுக்கு விலகிச் சென்று விடுங்கள்.

ஒரு மாணவரது வெற்றியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் செல்வாக்குச் செலுத்துவதைப் போன்றே, நண்பர்களும் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். அந்தவகையில், ஒருவரைப் பார்த்து இன்னொருவர் முன்னேற வழி அமைக்குமாறு நட்பு அமைய வேண்டும். கல்வி கற்பதற்கு ஊக்கம் தரும் நண்பர்கள் நம்முடன் இருப்பார்களேயானால், நம்மால் நிச்சயம் முன்னேற முடியும். நண்பர்களுடன் இணைந்து சிறப்பாக திட்டமிட்டு செயற்பாடுகளை மேற்கொண்டு கல்வி கற்கும் மாணவர்களும் இருக்கின்றனர். ஆகவே, இவ்வாறானவர்களுடன் நட்புக்கொள்வதும் தொடர்பைக் கட்டியெழுப்புவதும் எமக்கு மட்டுமன்றி, எமது கல்வியை மேம்படுத்தவும் உதவும். அவர்களைப் பார்த்து நாமும் முன்னேற வேண்டும் என்ற ஆவலும் எமக்கு ஏற்படும். ஆகவே, கல்வி கற்கின்ற இப்பருவத்தில் கல்விக்கு இடையூறு விளைவிக்காத வகையில் நல்லவர்களோடு நட்புக்கொள்வதானது, கல்விக்கு என்றைக்குமே பாதிப்பை ஏற்படுத்தாது.

(தொடரும்)

எம்.ஏ.எஃப்.சப்ரானா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனையாளர்: அரசியல்

# ஃபிரெட்ரிக் எங்கெல்ஸ் (1820-1895)



**1820** ஆம் ஆண்டு நொவெம்பர் 28 ஆம் திகதி, இன்றைய ஜேர்மனியின் ஒரு பகுதியாகிய அன்றைய பிரஷ்யாவின் ரைன் மாநிலத்தில் பிறந்தார் ஃபிரெட்ரிக் எங்கெல்ஸ். நெசவுத் தொழிலில் பேர்போன குடும்பம். முரட்டுத்தனமான தந்தை. அடங்கிப் போகும் தாய். உலகை புதிய மாறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்கும் சிறுவனாக எங்கெலஸ். அவரது வாழ்விடம் தொழில் துறையில் புகழ்மிக்கதாக இருந்தது. இதனால், சிறுவயது முதல் தொழிலாளர்களும் அவர்களது வாழ்வும் எங்கெல்ஸுக்கு நன்கு பரீட்சயமாயிருந்தது. அவர்களின் துன்பம் அவரை உறுத்தியது.

19 வயதில் மற்ற இளைஞர்களின் சிந்தனையும் செயற்பாடும் எப்படி எப்படியோயிருக்க எங்கெல்ஸின் அக்கறையோ சமுதாயத்தின் மீது இருந்தது. தான் கண்ட பிரச்சினைகள், ஒழுங்கற்ற நியதிகள், சமுதாய சீரிண்மை பற்றி ஆழமாக விளக்கி பல கட்டுரைகளை இவர் எழுதினார். எழுதுவதில் மட்டுமல்ல; இசை, நீச்சல், வாள் சண்டை, குதிரைச் சவாரி என அனைத்திலும் திறமை மிகுந்தவராகத் திகழ்ந்தார். அனைத்து அறிவாளிகளைப் போன்றே அவர் வாழ்விலும் வாசிப்புப் பழக்கம் நிறைந்திருந்தது. 1830 களில் ஐரோப்பாவில் புரட்சிகளும் கிளர்ச்சிகளும் தலைதூக்கின. பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் எனப் பல நாடுகளில் மக்கள் போராடத் தொடங்கினர். இருவரும் போராட்டங்கள் வசம் ஈர்க்கப்பட்டார். போராட்டங்கள் மற்றும் அவற்றின் பின்னணி பற்றி தனது கருத்துக்களை ஆணித்தரமாக எழுதினார். அவரது எழுத்து ஐரோப்பா எங்கும் பலரைக் கவர்ந்தது. சிலரை பயமுறுத்தியது. மேலும், சிலரையோ உற்சாகப்படுத்தியது.

1842 நொவெம்பரில் எங்கெல்ஸ் பிரிட்டனில் காலடி எடுத்து வைத்தார். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் உச்சகட்டமாக அன்றைய பிரிட்டன் விளங்கியது. எங்கெல்ஸ் அசுர வேகத்தில் எழுதினார். பத்திரிகைகளிலும் ஏனைய வெளியீடுகளிலும் அவரது எழுத்துப் புயல் வீசியது. 1844 இல் அந்த அற்புத நிகழ்வு அரங்கேறியது. கார்ல் மார்க்ஸ் எனும் வழக்கறிஞரை சந்தித்துப் பேசினார். தம் கருத்துக்களை வாய் மூலமும் எழுத்து மூலமும் இருவரும் பகிர்ந்து கொண்டனர். எங்கெல்ஸ் பிறந்த அதே பிரஷ்யாவின் ரைன் மாநிலத்தில் அவருக்கு 2 ஆண்டுகள் முன்பாகப் பிறந்தவர்தான் கார்ல் மார்க்ஸ். ஆனால், இருவரும் சந்தித்துப் பேச 24 ஆண்டுகள் பிடித்தன.

1845 இல் பிரசெல்ஸ் சந்திப்பின் போதுதான் தாங்கள் முற்றாகச் செயற்பட ஆரம்பித்ததாகக் கூறுகிறார் எங்கெல்ஸ். அங்கே கார்ல் மார்க்ஸ் பொதுவுடைமைச் சித்தாந்தங்களின் மூலங்களோடு வந்திருந்தார். இருவரும் அதை விரிவுபடுத்தும் முனைப்போடு செயற்பட்டார்கள். கார்ல் மார்க்ஸின் மறைவுக்குப் பின் 12 ஆண்டுகள் உயிர்வாழ்ந்த எங்கெல்சினால் இயற்றப்பட்டு உலகிற்கு வழங்கப்பட்டவை ஏராளம். அவர் பிறந்து ஏறக்குறைய 100 ஆண்டுகளின் பின் ரஷ்யாவில் புரட்சி ஏற்படவும் அடுத்த ஒரு நூற்றாண்டுகாலமாக உலக வரலாற்றில் பெரிதும் செல்வாக்கு செலுத்தியதும் 130 கோடி மக்களின் தத்துவார்த்த கருத்துக்களின் இதயமாக திகழ்ந்த மார்க்சிய கோட்பாடு இந்தளவிற்கு வெற்றி பெற எங்கெல்ஸ் என்ற ஒரு மனிதரே காரணமானார். இத்தகைய மாமனிதர் 1895 இல் இயற்கை எய்தினார்.

-ஆர்.ஜே

# விஷங்களின் வினோதம்

மனித உடலில் ஒவ்வாமையை உண்டாக்கி பாதிப்பை ஏற்படுத்தும் ரசாயனத்தை, 'விஷம்' என்று அழைக்கின்றார்கள். விலங்குகள், பறவைகள், பூச்சிகள் என அனைத்து வகை உயிரினங்களிலும் விஷமுள்ள பிராணிகள் உள்ளன.



ஒவ்வொன்றின் விஷமும், ஒவ்வொரு விதமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடியன. விஷத்தை நல்ல விடயத்திற்கும் தீய விடயத்திற்கும் பயன்படுத்துகின்றனர். அந்தவகையில், விஷத்தில் இருந்து விஷ முறிவு மருந்துகளும் தயாரிக்கப்பட்டு பயன்படுத்துகிறார்கள். யானை மற்றும் விலங்குகளை வேட்டையாடவும் சில உயிரினங்களை அழிக்கவும் உபயோகிக்கிறார்கள்.

மனிதர்கள் ஆரம்ப காலத்தில் காடுகளில் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்த காரணத்தால், பூச்சிகள் போன்ற உயிரினங்களின் விஷக்கடிகளால் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இத்தகைய காரணங்களால், நமது முன்னோர் விஷக்கடி மருந்துகளைப் பயன்படுத்துவதில் அதிகளவான நிபுணத்துவம் பெற்றிருந்தனர். எனினும், பூச்சிகளின் நச்சுச் சுரப்புகள் அமிலம், காரம் என்று அவ்வளவு எளிதில் பிரித்து விட முடியாது. காரணம், இவை தனித்த ரசாயனங்கள் அல்ல. அவை பல்வேறு வகையான ரசாயனங்களின் கலவையாக இருப்பதே ஆகும். எனவே, விஷக்கடிக்கு ஆளானவர்கள் மருத்துவரை நாடி உரிய சிகிச்சைகளை மேற்கொள்வதே சிறந்தது. தாமதித்தால், ஒவ்வாமை போன்ற தொல்லைகள் ஏற்பட்டு அவை உடல்நிலைக்கு கேட்டையே விளைவித்துவிடும்.

# பெரிய மூளை

1930 இல் நரம்பியல் விஞ்ஞானிகள் சிலர் மூளைக்கு மின்சாரத் தூண்டலைக் கொடுத்துப் பார்த்தனர். மூளையின் பெரும்பகுதி அதற்கு எவ்வித பதில் அசைவையும் காட்டாமல் இருந்தது. இதனால், மூளையின் பத்தில் ஒரு பங்கைத்தான் நாம் பயன்படுத்துகிறோம் என்று நம்பினர். அதன்பின்னர் செய்யப்பட்ட நவீன ஸ்கேனிங் முறையின்மூலம், மூளையைப் பற்றிய தவறான கூற்றுக்கள் களையப்பட்டு, மூளையின் அனைத்துப் பாகங்களும் நாள்முழுவதும் கவனமாகவே வேலை செய்து கொண்டிருக்கின்றன என கண்டறியப்பட்டது. மேலும், மூளையைப் பற்றிய சுவாரஸ்யமான இன்னொரு விடயம் விலங்குகளிலேயே மிகப் பெரிய மூளையைக் கொண்டது நீலத்திமிங்கிலம் என்று கூறப்படுகின்றது.



எனினும், உடல் எடையுடன் ஒப்பிடும்போது, அனைத்து விலங்குகளையும் விட, பெரிய மூளை மனிதனின் மூளைதான் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

# விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4476

இன்ஷிரா இயாஸ்,
சீனன் கோட்டை,
பேருவளை.



அங்.இல: 4477

ஏ.பிரித்தீவி,
கணபத் வத்த,
கம்பளை.



அங்.இல: 4478

ரிசாபா ரிஸ்வான்,
அம்பேபிடிய,
பேருவளை.



அங்.இல: 4479

சி.சாகித்தியன்,
சின்னப்புதுக்குளம்,
வவுனியா.



அங்.இல: 4480

அ.முன்ஷிப்,
அல்.அமீன் வீதி,
புதிய காத்தான்குடி-06



அங்.இல: 4481

சி.றோய் டிலக்ஷன்,
ஆண்டார் செட்டிவெளி,
நானாட்டான்.



அங்.இல: 4482

எம்.அஸ்ரார்,
நவகம்புர,
கொழும்பு-14.



அங்.இல: 4483

த.றெபேக்கா,
சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம் தெற்கு.



அங்.இல: 4484

தி.ரிஷிகேஷன்,
என்டர்சன் தொடர்மாடி,
நாரேஹென்பிடி.



அங்.இல: 4485

ஐ.கஸீர் ஹம்ஸா,
வளஹவித்தவெவ,
ஹொரொவப்பொதான.

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................

முகவரி:..................................

..................................

பாடசாலை:..................................

வகுப்பு:..................................

திகதி:..................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றிலிருந்து குடிநீர்?!



நாஸா நிறுவனம் காற்றில் உள்ள ஈரப்பதத்தை செயற்கையாகக் குளிர வைத்து, சுருங்க வைத்து நீராக மாற்றும் இயந்திரம் ஒன்றை உருவாக்கியுள்ளது. எனினும், நாஸாவிற்கு முன்னரே, 'அகியூலா சயன்ஸ்' என்ற இன்னொரு நிறுவனம் அதனையும்விட சிறப்பான இயந்திரத்தை உருவாக்கியுள்ளது. இப்பொழுது அதனையே அமெரிக்க இராணுவத்தினர் பாலைவனங்களில் பயன்படுத்துகின்றனர்.

ஒரு சதுர கிலோ மீற்றர் அளவுள்ள காற்றின் ஈரப்பதத்தில் உள்ள நீர் சாதாரணமாக 1,000,000,000,000,000 லீற்றர் வரை இருக்கின்றது. காற்றில் 14 சதவீத ஈரப்பதம் இருந்தால்கூட, ஒரு நாளைக்கு 600 கெலன் நீரை எடுக்கலாம். இதற்கமைய பெரிய அளவு இயந்திரங்களைக் கொண்டு 500,000 லீற்றர் நீர் வரை எடுக்க முடியும். இந்த இயந்திரம் செயல்படும் முறை, பொதுவாக வீட்டில் பாவிக்கப்படும் குளிர்சாதனப் பெட்டி போன்ற முறையில்தான் இயங்குகின்றது. இயந்திரத்தினால் உறிஞ்சி இழுக்கப்படுகின்ற காற்று, முதலில் ஒரு வடிகட்டி வழியாக செலுத்தப்படுகின்றது. இதன்மூலம் தூசுக்கள் அகற்றப்பட்டு பின்னர் காற்று குளிரூட்டும் வாயு கொண்ட குழாய்களுக்கு இடையே செலுத்தப்படுகிறது.

இதன்போது,குறைந்த வெப்பத்தில் நீராவி சுருங்கி நீராக மாறும். அதனை ஒரு தொட்டியில் சேகரித்து, பின்னர் வழக்கமான புற ஊதாக்கதிர், ஓசோன், சவ்வூடு பரவுதல் முறை மூலம் சுத்திகரித்து சுத்தமான நீராக மாற்றப்பட்டு பயன்பாட்டுக்கு அனுப்பப்படுகின்றது. இந்தக் கருவியை வடிவமைக்கும் முறையினைப் பொறுத்து திறனின் அளவு மாறுபடுவதால், இவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்கள் அதன் செயல் முறையை வெளியிடாமல் ரகசியமாக வைத்துள்ளன. மேலும் சில நிறுவனங்கள் காற்றில் உள்ள ஈரப்பதத்தினை கிரகிக்கும் ரசாயனங்களைப் பயன்படுத்தியும் இயந்திரங்களை வடிவமைத்துள்ளன.





# புயல்களுக்கு பெயர் வைக்கும் பழக்கம்

கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் சூட்டும் பழக்கம் கடந்த நூற்றாண்டில்தான் ஆரம்பமாகியது. அவுஸ்திரேலிய நாட்டவர்களே முதன்முதலாக இவ்வாறு புயல்களுக்குப் பெயர் சூட்டியுள்ளார்கள். 1950 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அமெரிக்காவும் இந்த வழக்கத்தை மேற்கொண்டது.

இதனையடுத்தே, சர்வதேச வானிலை ஆய்வு நிறுவனம், கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் சூட்டும் முறையை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தியது. அதன்படி, ஒவ்வொரு பிராந்தியத்திலும் நாடுகள் ஒன்றிணைந்து புயல்களுக்குப் பெயர் வைக்கும் முறை ஏற்படுத்தப்பட்டது.





கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் வங்கக்கடல் புயல்களுக்கு இவ்வாறே பெயர் சூட்டப்பட்டு வருகின்றது. கடந்த ஆண்டு 5 தடவைகள் ஏற்பட்ட புயல்களுக்கு பட்டியலில் உள்ள வரிசைப்படி லைலா, பந்து, பெட், கிரி, ஜல் என்று பெயரிடப்பட்டன. 2011 ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஏற்பட்ட புயலுக்கு மாலைதீவு நாடு தேர்வு செய்த 'கெய்லா' என்ற பெயர் சூட்டப்பட்டது. இதனையடுத்து, இந்த ஆண்டு இரண்டாவதாக வீசிய புயலுக்கு 'தானே' என்ற பெயர் மியான்மார் நாட்டினால் சூட்டப்பட்டது. மியன்மார் நாட்டின் ஜோதிடவியல் நிபுணர் 'மின் தானே கா' என்பவரின் பெயரைக் குறிப்பிடும் வகையில் இந்தப் பெயர் சூட்டப்பட்டதாகத் தெரியவருகின்றது. இந்த வரிசையில் அடுத்தடுத்து வரும் புயல்களுக்கு முன்ஜன் (ஏமன்), நீலம் (பாகிஸ்தான்), மகசென் (இலங்கை), பைலின் (தாய்லாந்து), ஹெலன் (வங்கதேசம்), லெகர் (இந்தியா) என்று பெயர்கள் சூட்டப்படவுள்ளன.



# சாக்கடல் மாயமாகும் அபாயம்

இஸ்ரேல்-ஜோர்தான் நாடுகளின் எல்லைகளுக்கிடையே சாக்கடல் அமைந்துள்ளது. இக்கடலில் உயிரினங்கள் வாழ முடியாமையினால் இது 'மரணக்கடல்' என்றும் அழைக்கப்படுகின்றது. முழுவதுமாக நிலத்தால் சூழப்பட்டுள்ள இந்த சாக்கடல் உவர் நீர் ஏரியாகும். 330 மீற்றர் ஆழமுடைய இக்கடல் பொதுவான கடல்நீரிலுள்ள உப்புத்தன்மையை விட 6-8 மடங்கு அதிக உப்புத்தன்மையுடன் காணப்படுகின்றது.







கடல் மட்டத்தில் இருந்து 425 மீற்றருக்குக் கீழே அமைந்திருக்கின்ற சாக் கடலானது, தற்போது தொடர்ந்தும் கீழ் இறங்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புவியின் மேல் ஓடுகளின்மீது ஏற்படும் விரிசல்களினாலேயே இந்த நீர் இறக்கம் ஏற்படுவதாக கருத்துக்கள் வெளியாகியுள்ளன. மேலும், இந்த சாக் கடலானது $1^{1/4}$ லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் திடீரென்று வற்றியுள்ளது. அதுபோன்றதொரு நிலை மீண்டும் ஏற்படலாம் என விஞ்ஞானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் வறட்சி நிலை ஏற்படுமானால், இந்த மிகப்பெரிய உவர்நீர் ஏரி தப்பிப் பிழைப்பது கடினம் என்பதோடு, அதன் நீர்ப்பரப்பின் அளவும் குறைந்துவிடும் அபாயம் ஏற்படுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இப்பகுதியில் சுற்றுச்சூழல் ஆராய்ச்சியாளர்கள் துளைகளிட்டு ஆய்வுகளை மேற்கொண்டபோதே, இந்த விடயம் தெரிய வந்ததாகவும் கூறுகின்றனர்.

# உடலில் தீப்பற்றினால் சுலபத்தில் அணைக்க முடியாது!

உடயவியல் நிபுணர்கள் சமீபத்தில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையின்படி, மனித உடம்பு முற்றிலுமாக எரிந்து, கரியாக மாற 650 டிகிரி செல்சியஸ் வெப்பம் தேவைப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. ஒரு மனிதனின் உடலில் தீப்பற்றிக்கொண்டால், முப்பது விநாடிக்குள் அந்தத் தீயை அணைப்பது சுலபம்.





அதற்கு மேல் நேரம் கடந்து விட்டால் அதனை அணைப்பது மிகவும் கடினமாகும்.

காரணம், உடலில் பற்றிக்கொண்ட தீயானது, தோலின் கீழே உள்ள சதைப் பரப்பைக் கடந்து கொழுப்புப் பகுதியை அடைவதால், அது மிகப் பெரிய விபரீதமாக அமைந்துவிடுவதாகும். இக்கொழுப்பு உருகி எரிபொருளாக மாற்றமடைந்து எரியும் வேகத்தை அதிகப்படுத்தி எலும்புகளையும் விறகாகக் கொண்டு எரிய ஆரம்பித்துவிடுகிறது. அத்துடன், தீக்காயங்கள் உடலின் உள்உறுப்புகளைத் தாக்குமானால், அந்த நபர் உயிர் பிழைப்பது அரிதாகவே காணப்படும். உடலில் தீப்பற்றினால் கனமான கம்பளி அல்லது போர்வையால் தீயை அணைப்பதே சுலபமானதும் பாதுகாப்பானதுமான முறை என்கின்றனர் நிபுணர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி ஐயங்கள்

## படங்கள் அதிகமுள்ள பக்கங்களின் குறைந்த வேகம்

இணையத்தில் படங்கள் குறைவாகவும் அதேவேளை, கூடிய எழுத்துக்களும் உள்ள பக்கங்கள் விரைவாக 'ஒப்பன் (Open) ஆவதுண்டு. ஆனால், கூடிய எண்ணிக்கையிலான படங்களைக் கொண்டுள்ள பக்கங்களை 'ஒப்பன்' செய்யும் போது, மிகவும் மெதுவாகவே அது 'ஒப்பன்' ஆகும். இதற்கான காரணம் என்ன?





இணையத்தளம் (வெப்) ஒன்றைத் திறக்கும்போது, அதற்கு தொடர்புடைய சகலவிதமான தரவுகளும் இணைய சேவையை வழங்குகின்ற தொடர்பிலிருந்தே (Internet Server) கணினிக்கு வரவேண்டியிருக்கும். இவ்வாறு இந்த தரவுகள் அனைத்தும் தொலைபேசி மார்க்கமாகவே வந்தடைகின்றன.



எழுத்துக்களை மட்டுமே கொண்ட சாதாரண 'வெப் பக்கத்தின்' கொள்ளளவானது, பரிமாறிக்கொள்ளப்படுகின்ற தகவல்களின் 'பைட்ஸ்' (Bites) எண்ணிக்கை, படங்கள் அதிகமுள்ள பக்கங்களின் கொள்ளளவை விட குறைவானது. இதனால், அவை மிக விரைவாக ஒப்பன் (Open) ஆகின்றன. இதேவேளை, படங்கள் அதிகமுள்ள பக்கங்களாயின் அந்த படங்களுக்கு உரிய தரவுகளும் 'சேர்வர்' கணினியிலிருந்தே வெளிப்பட வேண்டியிருக்கும். இதனால், இந்த செயற்பாடுகளுக்கு கூடிய நேரம் தேவைப்படும்.

இத்தகைய காரணங்களினால் 'வெப்' பக்கங்களை உருவாக்குகின்றவர்கள் அவற்றிற்கு அவசியமற்ற ரீதியில் படங்களைச் சேர்ப்பதைத் தவிர்ப்பதற்கும்; இணைக்கப்படுகின்ற படங்களின் கொள்ளளவு குறையும் வகையில் அமைப்பதற்கும், கூடிய அக்கறை செலுத்துவர். பொதுவாக 'bitmap' ரகத்திலான படங்கள் 'வெப்' பக்கங்களில் சேர்ப்பதைத் தவிர்ப்பது மட்டுமன்றி gif,jpeg, png, swf போன்ற ரகத்திலான இமேஜ் மற்றும் எனிமேஷன், உள்ளடக்கப்பட்ட 'ஃபைல்ஸ்' (files) வெப் பக்கங்களில் சேர்ப்பர். இவ்வாறு சேர்க்கப்படுகின்ற இமேஜ், ஃபோட்டோ ஷொப் ஆகிய 'ஃபோட்டோ எடிட்டிங்' மென்பொருள் பாவனையில் 'Optimize' செய்து உட்செலுத்தப்படும். இந்த தொழிற்பாடானது, அந்தக் குறித்த படங்கள் வேறொருவருக்காக 'வெப்' பக்கத்தில் ஒப்பன் ஆவதற்கு செலவாகின்ற நேரத்தை 'வெப்' பக்கத்தை தயாரிக்கின்றவருக்கு காட்டி நிற்கும்.

## ஹார்ட் டிஸ்க் ஃபைல்ஸ் அழித்தல்



'ஹார்ட் டிஸ்க்'கில் உள்ள 'ஃபைல்ஸ்'(files) களை அழித்து விடுவதற்கு அல்லது 'கட்' (Cut) செய்வதற்கு முனைக்கும்போது "make sure the disk is not full or Right protected and the file is not currently in use" என்ற 'மெசேஜ்' திரையில் சிலவேளை தோன்றுவதுண்டு.



இவ்வாறான மெசேஜ் தோன்றுவது ஏன்?

'ஹார்ட் டிஸ்க்கினுள் உள்ள ஃபைல்ஸ்களை அழிப்பதற்கு முயற்சிக்கையில் இவ்வாறான தகவல் கிடைக்கப் பெறுமாயின், அந்த சந்தர்ப்பத்தில் அதே குறிப்பிட்ட 'ஃபைல்ஸ்'கள் இன்னொரு இடத்தில் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கலாம். அல்லது அறியாமல் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற வேறொரு 'புரொகிராமினால் அது பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருப்பதாகவும் இருக்கலாம். அத்தோடு, கணினியில் 'ஹார்ட் டிஸ்'க்கில் கொள்ளவு இட வசதி (free space) மிகவும் குறைவடையும் நிலையிலும் இவ்வாறான மெசேஜ் தோன்றுவதுண்டு. பொதுவாக, ஹார்ட் டிஸ்க்கில் ஆகக் குறைந்தது 20% ஆவது இடவசதி வெறுமையாக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.



எனவே, இடவசதியை ஏற்படுத்திக் கொள்வதற்கு கணினியில் உள்ள அவசியமற்ற, அழிக்கக்கூடிய ஃபைல்ஸ்களை அழித்து 'Recycle Bin' இனை Empty ஆக்குங்கள். சிலவேளைகளில் கணினியின் 'ரெம்' (Ram) இல் காணப்படக் கூடிய கோளாறுகளினாலும் இவ்வாறு தோன்றலாம். அவ்வாறே 'Memory Recidencial virus' என்ற வைரஸ் கணினியில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் இவ்வாறான பிரச்சினைகள் எழலாம். இருப்பினும் இத்தகைய கோளாறுகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் 'ஹார்ட் டிஸ்'கை ஃபோமெட் செய்து மீண்டும் உரியவற்றை 'இன்ஸ்ட்டோல்' செய்து பயன்படுத்தல் வேண்டும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2012, பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 01, 2012.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org